வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 21.12.2021 செவ்வாய்க்கிழமை | இதழ் : 16 | பக்கங்கள் : 16

## இன்று கூடுகின்றன தமிழ் பேசும் கட்சிகள்

# தனியான வரைவுடன் தமிழ் அரசு பங்கேற்கும்

கொழும்பு, டிசெம்பர் 21

தமிழ் பேசும் கட்சிகள் இன்றுகூடி பொது உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடவுள்ளன. பொது உடன்படிக்கையில் உள்ளடங்க வேண்டிய விடயங்கள் தொடர்பாக தனியான வரைவு ஒன்றுடன் தமிழ் அரசு கட்சியின் தலைவர்கள் பங்கேற்பது என்று அந்தக் கட்சி தீர்மானித்துள்ளது.

அத்துடன், இந்த வரைவில் கூறப்பட்ட விடயங்கள் பொதுஉடன்படிக்கையில் சேர்த்துக் கொள்ளப்பட்டால் மட்டும் இலங்கை தமிழ் அரசு கட்சி அதில் கையொப்பமிடும் என்றும் நேற்று கொழும்பில் கூடிய தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழுவின் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டதாக கட்சியின் வட்டாரங்கள் 'ஈழநாடு'வுக்கு தெரிவித்தன. 15



புத்தாண்டை வரவேற்கும் முகமாக ஐந்தாவது வருடமாக டான் தொலைக்காட்சி குழுமம் யாழ். நகரின் மணிக்கூட்டு கோபுரத்தை மின் விளக்குகளால் அலங்கரித்து திறந்து வைத்தது. இதில் விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரச அதிபர் க. மகேசன், யாழ். மாநகர முதல்வர் வி. மணிவண்ணன், யாழ். மாநகர ஆணையாளர் த. ஜெயசீலன் ஆகியோர் பங்கேற்றனர்.

படம் : ஐ. சிவசாந்தன்

## கிளிநொச்சியில் குடும்பஸ்தர் அடித்து கொலை

*கிளிநொச்சி, டிசெ. 21*

*தகராறு காரணமாக குடும்பஸ்தர் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டார். கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.*

*கடந்த 16ஆம் திகதி இருவரிடையே ஏற்பட்ட முரண்பாடு தகராறாக மாறி மோதலில் முடிந்தது. இதில், தலையில் படுகாயமடைந்த 51 வயது நபர் அயலவர்களால் காப்பாற்றப்பட்டு கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.*

*அங்கு சிகிச்சை பெற்றுவந்த* 15



## பட்டத்துடன் சேர்ந்து 40 அடிக்கு பறந்த நபர்!

### வடமராட்சியில் நேற்று அதிர்ச்சி

*வடமராட்சி, டிசெ. 21*

*பட்டம் விட்ட இளம் குடும்பஸ்தரை சுமார் 40 அடி உயரத்துக்கு பட்டம் தூக்கிச் சென்ற சம்பவம் நேற்று வடமராட்சியில் இடம்பெற்றது.*

*பருத்தித்துறை - புலோலி பகுதியில் இடம்பெற்ற இந்தச்* 15

## 11 கட்சி தலைவர்கள் இன்று கூடிப் பேசுவர்!

*கொழும்பு, டிசெ. 21*

*தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் 11 கட்சிகளின் தலைவர்கள் இன்று செவ்வாய்க்கிழமை கொழும்பில் கூடிப் பேசுவதுடன் பொதுஉடன்படிக்கையிலும் கையொப்பமிடவுள்ளனர்.*

*தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ கட்சியின்* 15

## 20 ரூபாயால் எகிறியது பெற்றோல்

*கொழும்பு, டிசெ. 21*

*நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் எரிபொருட்களின் விலைகள் உயர்த்தப்பட்டுள்ளன என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.* 15

## தாய்வீடு திரும்பும் பெரும் புள்ளிகள்!

*கொழும்பு, டிசெ. 21*

*ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் செயல்பாட்டாளர்கள் கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் முக்கிய பேச்சில் ஈடுபட்டுள்ளதாக கட்சி வட்டாரங்களிலிருந்து அறிய முடிகின்றது.*

*ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன, சட்டத்தரணி சிரால் லக்திலக, குணரத்ன வன்னி நாயக்க, நுவா கட்சியின் தலைவர்* 15

## பெண்ணை வெட்டிக் கொன்று அணிந்திருந்த நகை அபகரிப்பு!

### மட்டக்களப்பில் நேற்று பயங்கரம்

*மட்டக்களப்பு, டிசெ. 21*

*பெண்ணை வெட்டிக் கொன்றுவிட்டு அவர் அணிந்திருந்த நகைகளை கொள்ளையிட்டு தப்பிக்க முனைந்த பெண்ணையும் அவரின் தந்தையையும் மக்கள் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.*

*குறித்த இருவரும், பெண்ணின் தோட்டுக்காக காதையும் சேர்த்து அறுத்துக் கொண்டு தப்பியோட முனைந்திருந்தனர் என்றும் அறியவருகின்றது. மட்டக்களப்பு* 15

## திடீர் மூச்சு திணறலினால் யாழில் ஒன்றரை வயது குழந்தை மரணம்!

*யாழ்ப்பாணம், டிசெ. 21*

*திடீர் மூச்சுத் திணறல் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒன்றரை வயதுக் குழந்தை சிகிச்சை பயனின்றி உயிரிழந்தது.*

*புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அருள் டயஸ் கிவின்சலா என்ற பெண் குழந்தையே உயிரிழந்தது.*

*நேற்று முன்தினம் மாலை குழந்தைக்கு திடீர் மூச்சுத் திணறல் ஏற்பட்டுள்ளது. உடனடியாக புங்குடுதீவு பிரதேச வைத்தியசாலையில் குழந்தை சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா* 15

## இன்று மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பு!

*கொழும்பு, டிசெ. 21*

*அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் இன்று நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.*

*நேற்று 5 மாவட்டங்களில் ஆரம்பமான இந்தத் தொழிற்சங்கப் போராட்டம் இன்று நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படுகின்றது.*

*அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதித்துவம் இல்லாமல் சுகாதார அமைச்சால் 500 மருத்துவர்களுக்கான நியமனப் பட்டியல் வெளியிடப்பட்டமைக்கு எதிர்ப்புத்* 15




உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# நாட்டை முடக்காமல் கொரோனாவை கட்டுப்படுத்த மக்கள் உதவவேண்டும்

## ஹேமந்த ஹேரத் வேண்டுகோள்

கொழும்பு, டிசெ. 21

நாட்டை முழுமையாக முடக்காமல், கோவிட் பரவலை கட்டுப்படுத்தவும், மக்களைப் பாதுகாக்கவும் அனைத்து சுகாதார நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதால், மக்கள் சரியான சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி, தேவையான தடுப்பூசிகளைப் பெறுக்கொள்வது சிறப்பானதாக அமையும் சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளரும், சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகமுமான வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மரபணு பரிசோதனையானது, வைரஸின் புதிய திரிபுகளை அடையாளம் காண்பதற்கு சுகாதாரத் துறையால் முன்னெடுக்கப்படும் ஒரு அணுகுமுறையாகும். இந்த



செயற்பாட்டினால், நாட்டில் கொரோனா வைரஸின் அல்பா, டெல்டா மற்றும் ஒமைக்ரோன் ஆகியவற்றின் புதிய திரிபுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் இந்த விஞ்ஞான முறையானது நோயாளர்களை அடையாளம் காண, புதிய திரிபு வகைகளை கண்டறியவும் தொடர்ந்தும் பயன்படுத்தப்படும். இலங்கையில் ஒமைக்ரொன் வைரஸால் பாதிக்கப்பட்ட நால்வருக்கும் எவ்வாறு வைரஸ் தொற்று ஏற்பட்டது, அவர்களுடன் தொடர்புடையவர்கள் யார் என்பது தொடர்பில், சுகாதார பிரிவினரால் ஆராயப்பட்டு வருகிறது.

மேலும், சுகாதார அமைச்சு இந்த நீண்ட மற்றும் தீவிரமான செயல்முறையை தனியாளாக மேற்கொள்வது கடினம். இதற்காக பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற சுகாதார நிறுவனங்களின் முழு ஆதரவு தேவை.

செயலூக்கி தடுப்பூசியை கட்டாயமாகவும் விரைவாகவும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எதிர்காலத்தில் இந்த வைரஸ் பரவுமானால், பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்தும் நிலைமையைக் கட்டுப்படுத்த சுகாதாரத்துறை மீண்டும் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். இந்த வைரஸ் உடலில் நுழையும்போது வைரஸின் செயல்பாடு நபருக்கு நபர் மாறுபடும்.

மூன்றாவது தடுப்பூசி தற்போது ஒரு மில்லியனுக்கும் அதிகமானோருக்கு செலுத்தப்பட்டுள்ளது. தடுப்பூசி செலுத்துகையின் பின்னர் ஏற்படும் காய்ச்சல் மற்றும் தலைச்சுற்றல் போன்ற பொதுவான சிக்கல்களால் அச்சப்பட வேண்டாம்.

கடந்த காலங்களிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களின் படி, நாட்டை முழுமையாக முடக்காமல், கோவிட் பரவலை கட்டுப்படுத்தவும், மக்களைப் பாதுகாக்கவும் அனைத்து சுகாதார நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதால், மக்கள் சரியான சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி, தேவையான தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வது சிறப்பானதாக அமையும்-என்றார். (அ)

# மன்னார் வைத்தியசாலையில் மருத்துவர் பணிப்புறக்கணிப்பு

மன்னார், டிசெ. 21

மன்னார் பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் அரச வைத்தியர்கள் நேற்று திங்கட்கிழமை காலை தொடக்கம் பணி புறக்கணிப்புப் போராட்டத்தை மேற்கொண்டர்.

மத்திய சுகாதார திணைக்களத்தினூடாக கடந்த 13-12-2021 அன்று மேற்கொள்ளப்பட்ட பணியிடை மாற்றம் ஒழுங்கான முறையில் இடம் பெறவில்லை எனவும் குறித்த இடமாற்றம் தொடர்பாக மாவட்ட ரீதியில் உள்ள வைத்தியசாலை நிர்வாகத்தினரின் எந்த வித ஆலோசனையும் மேற்கொள்ளாது வைத்தியர் தேவை உள்ள இடங்களைப் புறக்கணித்து தேவையற்ற இடங்களுக்கு வைத்தியர்களை நியமித்துள்ளதாக கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இரத்தினபுரி, நுவரெலியா, பொலனறுவை, திருகோணமலை, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இந்த முறையற்ற பணியிட மாற்றம் இடம்பெற்றுள்ளதாகவும், எனவே அரசாங்கம் பணியிட மாற்றத்தை ரத்து செய்து மாவட்ட ரீதியில் உள்ள வைத் தியசாலை நிர்வாகத்தினருடன் கலந்தாலோசித்து தேவை உள்ள இடங்களுக்கு இடமாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் எனவும், கடந்த 13ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட இடமாற்றத்தை ரத்து செய்யு மாறு கோரி அரச வைத்திய அதிகாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவு தவிர்ந்த ஏனைய அனைத்து சேவைகளும் நேற்று நிறுத்தப்பட்டன.

இதனால் தூர இடங்களில் இருந்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு சிகிச்சைகளுக்காக வந்த வயோதிபர்கள், பெண்கள், கர்ப்பிணிகள் என பலர் பாதிக்கப்பட்டதுடன், ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர். (அ)

# உண்ணிக் காய்ச்சலினால் யாழில் மூதாட்டி மரணம்!

யாழ்ப்பாணம், டிசெ. 21

உண்ணிக் காய்ச்சல் காரணமாக முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் மூன்று நாள்களின் பின் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம், கொட்டடியைச் சேர்ந்த செபஸ்ரியன் பெனடிக் றொசாரி (வயது-63) என்ற மூதாட்டியே உயிரிழந்தார்.

கடந்த 16ஆம் திகதி காலை உடல்நலக்குறைவு காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

எனினும் சிகிச்சை பயனின்றி அவர் நேற்று முன் தினம் காலை உயிரிழந்தார்.

அவரது உயிரிழப்புக்கு உண்ணிக் காய்ச்சலே காரணம் என மருத்துவ அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத் துவமனை திடீர் இறப்பு விசா ரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் முன்னெடுத்தார். (அ-03)



# முல்லைத்தீவு கடற்கரையில் ஒதுங்கிய மூங்கில் படகு!

முல்லைத்தீவு, டிசெ. 21

முல்லைத்தீவு மாவட்டத்தின் கடற்கரையில் மூங்கிலால் வடிவமைக்கப்பட்ட படகு ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

வேற்று மொழியில் எழுத்தப்பட்ட இந்த படகு நேற்றுக் காலை கரை ஒதுங்கியுள்ளது.

முல்லைத்தீவு சாலை முகத்துவாரப்பகுதியில் இது கரை ஒதுங்கியுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

இது முற்றுமுழுதாக மூங்கில்களாலும் சப்பு பலகையினாலும் இது அமைக்கப்பட்டுள்ளது. இந்த படகு இந்தியாவில் இருந்து வந்திருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது. (அ)

கல்வி tv CHANNEL-1

**21.12.2021 செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | கணிதம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | கணிதம் |

கல்வி tv CHANNEL - 2

**21.12.2021 செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கணிதம் |
| 09.00 | தரம்-02 | தமிழ் |
| 09.45 | தரம்-03 | கணிதம் |
| 10.30 | தரம்-03 | English |
| 11.15 | தரம்-04 | கணிதம் |
| 12.30 | தரம்-04 | English |
| 01.15 | தரம்-05 | கணிதம் |
| 02.00 | தரம்-05 | English |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | தமிழ் |
| 06.00 | தரம்-03 | கணிதம் |
| 06.45 | தரம்-03 | English |
| 07.30 | தரம்-04 | கணிதம் |
| 08.15 | தரம்-04 | English |
| 09.00 | தரம்-05 | கணிதம் |
| 09.45 | தரம்-05 | English |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கணிதம் |
| 12.30 | தரம்-03 | English |
| 01.15 | தரம்-04 | கணிதம் |
| 02.00 | தரம்-04 | English |
| 02.45 | தரம்-05 | கணிதம் |
| 03.30 | தரம்-05 | English |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
21.12.2021 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், மார்கழி 06

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

editor@eelanadu.lk, eelanaduweekly@gmail.com,
news@eelanadu.lk
021 730 1370

## ஜீ. எல். பீரிஸின் ஞானம்?

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ், கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு அறிவுரை வழங்கியிருக்கின்றார். அதாவது, எந்தவொரு வெளிநாடும், தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்குமென்று கனவு காண வேண்டாமென்று அவர் கூறியிருக்கின்றார். வெளிநாடுகள் தீர்வு தருமென்று தமிழர்கள் நம்பவில்லை. ஆனால், வெளிநாடுகளின் அழுத்தங்களின்றி - சிங்கள ஆட்சியாளர்கள் எந்தவொரு தீர்வையும் தரப்போவதில்லை என்றே தமிழ் மக்கள் நம்புகின்றனர். பீரிஸ் போன்றவர்கள் தங்களை நோக்கி ஒரு கேள்வியை கேட்டுக் கொள்ள வேண்டும் - அதாவது, தமிழ் மக்கள் ஏன் வெளியாரை நோக்கி வேண்டுகோள் விடுக்கின்றனர்? ஏன் சிங்கள ஆட்சியாளர்கள்மீது நம்பிக்கையின்றி இருக்கின்றனர்?

ஜீ. எல். பீரிஸ், விடுதலைப் புலிகளுக்கும் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சின்போது, அரச தரப்புக்கு தலைமை தாங்கியவர். சந்திரிகா குமாரதுங்க காலத்தில் முன்வைக்கப்பட்ட தீர்வுப் பொதியை வரைந்ததில் பிரதான பங்குவகித்தவர். மஹிந்த ராஜபக்ஷ காலத்தில், கூட்டமைப்புடன் இடம்பெற்ற பேச்சுக்களுக்கு தலைமை தாங்கியவர். ஆனாலும், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வில் ஓர் இணக்கப்பாட்டை காணமுடியவில்லை. விடுதலைப் புலிகளுக்கும் ரணில் அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சை ஒரு பக்கமாக வைப்போம் - ஏனெனில், அது முற்றிலும் வேறுபட்ட ஒன்று. ஆனால், ஏனைய பேச்சுகள் ஏன் வெற்றியளிக்கவில்லை? அவை வெற்றியளிக்காமைக்கு யார் காரணம்? நிச்சயமாகத் தமிழர்கள் இல்லை.

யுத்தம் நிறைவுற்றதும், மஹிந்த ராஜபக்ஷ 13ஆவது திருத்தச் சட்டத்திற்கும் அப்பால் சென்று தீர்வை காண்பதாக வாக்குறுதியளித்திருந்தார் - அந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டதா? ஆகக் குறைந்தது, அரசியல் யாப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தைக்கூட முழுமையாக அமுல்படுத்த முயற்சிக்கவில்லை. இதற்கு யார் காரணம்? நிச்சயமாக தமிழர்கள் இல்லை. இந்த நிலையில் எந்த அடிப்படையில் தமிழ் மக்கள் சிங்கள ஆட்சியாளர்கள்மீது நம்பிக்கை வைக்க முடியும்? தமிழ் மக்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகளை சிங்கள ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் புறக்கணித்து வருவதால்தான், தமிழ் மக்கள் தொடர்ந்தும் வெளிநாடுகளை - குறிப்பாக, இந்தியா மற்றும் அமெரிக்காவை நோக்கி தங்களின் வேண்டுகோளை முன்வைத்து வருகின்றனர்?

இந்திய அமெரிக்க அழுத்தங்கள் மூலம் மட்டும்தான் கொழும்பின் ஆட்சியாளர்கள் இறங்கிவருவார்கள் என்பதே தமிழ் மக்களின் நம்பிக்கையாக இருக்கின்றது. வரலாற்று அனுபவங்களோடு ஒப்பிட்டு நோக்கினால், இந்த நம்பிக்கையில் எந்தவொரு தவறும் இல்லை. அது முற்றிலும் சரியானதுதான். கூட்டமைப்பின் பிரதிநிதியும் - பீரிஸ௺ம் சந்திப்பதற்குக்கூட, அமெரிக்க தூதுவரின் இல்லம் தேவைப்படுகின்றது. இதுதான் யதார்த்தமென்றால், இந்தியாவினதும் அமெரிக்காவினதும் ஆதரவின் மூலம் தங்களுக்கான விமோசனத்தை எதிர்பார்ப்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும். சம்பந்தனின் கனவு தொடர்பில் அக்கறைப்படுவதை விடுத்து, பீரிஸ், தான் சார்ந்த அரசாங்கத்தின் கனவு என்ன மூ அதில் தமிழ் மக்களுக்கான தீர்வு என்ன - என்பது தொடபில் சிந்திக்க முன்வர வேண்டும். அரசியல் யாப்பில் இருக்கின்ற 13ஆவது திருத்தத்தைக்கூட, இல்லாதொழிப்பதற்கான சதித்திட்டங்களை அரங்கேற்றும் பீரிஸ் - முதலில் தனது புலமைக்கு நேர்மையாக இருப்பதற்கான கனவுகளை காண முன்வர வேண்டும்.

# இந்திய வேட்டி அணிந்து நல்லூர் கந்தனை தரிசித்த சீன தூதுவர்: ‘சாத்தானிடம்’ வேதம் கேட்கும் சம்பந்தன்!

-அலசுவது இராஜதந்திரி-



இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் வட பகுதிக்கு சில தினங்களுக்கு முன் னர் பயணம் வந்தமை ஒரு சிறு நில நடுக்கம் போல இலங்கையில் மட்டுமல்ல. இந்தியாவின் தமிழகத்திலும் எதிரொலித்துள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

தமிழகத்தின் பாட்டாளி மக்கள் கட்சி (பா. ம. க) நிறுவுநர் ராமதாஸ்கூட இலங்கையிலுள்ள சீனத் தூதுவரின் யாழ்ப்பாண விஜயம் குறித்து தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளார். இதன் மூலம் சீனாவின் ஒவ்வொரு நகர்வும் இலங்கையில் மிக உன்னிப்பாக இந்தியா உட்பட சர்வதேச சமூகத்தினால் அவதானிக்கப்படுவதையே அறிய முடிகின்றது.

இருந்தபோதிலும் இந்தியாவில் தமிழகத்தில் ஐந்தாம் மற்றும் ஆறாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த பல்லவ இளவரசனான போதிதர்மர் சீனாவில் இன்றுங்கூட ஒரு மகானாகவே பூஜிக்கப்படுகின்றார். இவர் இயற்கை மருத்துவம், தற்பாதுகாப்புக் கலை என்பவற்றில் கைதேர்ந்தவர். இவரது வாழ்க்கை சரிதத்தை மையமாக வைத்தே ஓரிரு வருடங்களுக்கு முன்னர் ‘ஏழாம் அறிவு’ என்ற தமிழ் திரைப்படம் வெளியாகியிருந்தது.

அத்துடன், தமிழகத்தில் வாழ்ந்த பதினெட்டு சித்தர்களில் ஒருவரான காலங்கி நாதர் என்பவர்கூட ஒரு சீன இனத்தவர் எனவும் இவரின் சீடரான போகர் என்ற சித்தரே நவபாஷாணம் மூலம் பழனி முருகனின் தண்டாயுத பாணி கோலத்தை வடிவமைத்தவர் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

எனவே, பூகோள அரசியலில் கெடுபிடிகள் ஏற்படுவதற்கு முன்பதாக பல்லவ இளவரசனான போதிதர்மனின் வாழ்க்கை, மற்றும் பதினெட்டு சித்தர்களில் ஒருவரான சீன இனத்தைச் சேர்ந்த காலங்கி நாதர், போகர் போன்றோரின் வாழ்க்கை எவ்வளவு தூரம் இந்தியாவுடன் சீனா தொடர்புபட்டிருந்ததென்பதையே எடுத்துக்காட்டுவதாக இருக்கின்றது.

தமிழகத்துடனான இத்தகைய வரலாற்றுப் பின்னணியை சீனா கொண்டுள்ள நிலையிலேயே சீனத்தூதுவரின் யாழ்ப்பாண விஜயமும் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது.

அரசியல் காரணங்கள் எதுவாகவுமிருக்கலாம். ஆனால், சீனத்தூதுவர் கீ சென் ஹொங், யாழ்ப்பாணக்கலாசாரத்தின் முக்கிய ஆன்மீக நிறுவனமாக இருக்கின்ற நல்லூர் கந்தசுவாமி கோயிலை ஆசாரசீலராக தமது தூதரக அதிகாரிகள் சகிதம் சென்று தரிசித்திருந்தார். அப்போது, அவரும் அவரோடு சென்றிருந்த சீன தூதரக அதிகாரிகளும் இந்திய பட்டு வேட்டிகளையே அணிந்திருந்தனர்.

அத்துடன், நல்லூர் ஆலய ஆசாரத்துக்கு மதிப்பளிக்கும் வகையில் சீன அதிகாரிகள் தமது மேலங்கிகளையும் கழற்றியிருந்தனர். இவ்வாறு சீனத் தூதவரும் அவரின் அதிகாரிகளும் நல்லூரில் சுவாமி தரிசனம் செய்தமை யாழ்ப்பாணத் தமிழரின் கலாசாரத்துக்கு மதிப்பளிப்பதாக இருந்ததென்றே கருத முடியும்.

இருந்தபோதிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் மூத்த அரசியல் பிரமுகரான பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் இதுவரை காலமும் சீனா குறித்து எவ்வித கருத்தும் வெளியிடாதிருந்த நிலையில் சீனத் தூதுவரின் யாழ்ப்பாண விஜயத்தையடுத்து வடக்கு - கிழக்கு தமிழர்களின் அரசியல் தீர்வு தொடர்பாக சீனா எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என்று கேள்வி எழுப்பியுள்ளார்.


சீனா தனது அரசியல் பின்னணிகளுக்கு உட்பட்டதாக திறந்த பொருளாதார கொள்கையோடு தனது நாட்டை ஒரு முக்கிய சக்தியாக மாற்றியமைத்துள்ளது. இதன் வெளிப்பாடாகவே இலங்கையிலும் அதன் செல்வாக்கு விரிவடைந்துள்ளது. ஆயினும், அரசியல் ரீதியாக சீனா தனக்கென வகுத்து வைத்துள்ள ஆட்சிமுறை ஜனநாயக விழுமியங்கள் பலவற்றை எள்ளி நகையாடுவதாகவுமிருக்கின்றது.

மறைந்த சீன அதிபர் டெங் சியாவோ பெங் இன்றைய சீனாவின் வளர்ச்சிக்கு வழியமைத்திருந்தார். இருந்தபோதிலும் சீனாவில் முழுமையான ஜனநாயக நடைமுறை காணப்படுவதாக இல்லை. அத்துடன், சீனா அரசியல் ரீதியாக பல இறுக்கமான கட்டுப்பாடுகளை கொண்டுள்ளது. கருத்துச் சுதந்திரம், பேச்சு சுதந்திரம் என்பவை எல்லாம் சீனாவில் கட்டுப்பாடுகளுக்கு உள்ளானவையாகவே இருக்கின்றன.

இதுதவிர, சீனாவில் மனித உரிமை மீறல்கள் எண்ணில் அடங்காதவையாக அதேசமயம் இரகசியமாக இடம்பெறுகின்றன. சீனாவை பொறுத்தவரை வடக்கு - கிழக்கு மக்கள் எதனையும் எதிர்பார்ப்பார்களேயானால் அந்த எதிர்பார்ப்பு பொருளாதார ரீதியாகவே இருக்க முடியும்.

இந்நிலையில் முதிர்ந்த அரசியல்வாதியான இரா. சம்பந்தன் பரந்துபட்ட சமஷ்டி அடிப்படையிலான தீர்வை எதிர்பார்த்திருக்கும் வடக்கு - கிழக்கு மக்களின் ஒரு தலைமைப் பிரதிநிதியாக வடக்கு - கிழக்கு அரசியல் தீர்வு விடயத்தில் சீனாவின் கொள்கை என்னவென்று கேள்வி எழுப்பியுள்ளமை “சாத்தானிடம் வேதம் கேட்டதை“ப்போன்றுள்ளதென்றே குறிப்பிட முடியும்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



டிசெம்பர் - 21 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம் - மார்கழி - 06
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 3.00 - 4.30
திதி : அதிதி




**மேடம்**
மகிழ்ச்சி நிறைந்த நாள். விலை உயர்ந்த பொருளை வாங்குவீர்கள். சந்தோஷச் செய்தி உண்டு. உங்களின் பயணத் திட்டம் பலிக்கும். உங்களது விடாமுயற்சியால் வெற்றி.

**இடபம்**
எதிர்பாராத மாற்றம் ஒன்று நிகழ்ந்து உங்களை மகிழ்விக்கும். இளைஞர்கள் வெற்றி பெறுவீர்கள். உங்களின் சேமிப்பு உயரும். நிதி நிலைமை சிறப்பாக இருக்கும். ஓய்வு கிடைக்கும்.

**மிதுனம்**
நீண்ட கால முயற்சி ஒன்றில் வெற்றி சாத்தியமாகும். நண்பர்களின் சந்திப்பு நிகழும். புது விஷயத்தை கற்பீர்கள். எடுத்த விஷயம் ஒன்றை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள்.

**கடகம்**
எதிர்க்கருத்து உள்ளவர்கள் மெல்ல மாறி வருவார்கள். நண்பர்கள், உறவினர்களின் ஆதரவை உதாசீனம் செய்ய வேண்டாம். மன உளைச்சல் நீங்கும். மகிழ்ச்சி நிலவும். சுப நிகழ்வு உண்டு.

**சிம்மம்**
சமூகத்தில் உங்களுக்கு மரியாதை அதிகரிக்கும். சிக்கல் தீரும். உங்களின் முன்னேற்றத்திற்கு வேற்று மொழிக்காரரின் ஒத்துழைப்பு உண்டு. வெளி யூரில் இருக்கும் குழந்தைகள் ஆதரவாக செயல்படுவர்.

**கன்னி**
பேச்சைக் குறைத்துக்கொண்டு செயலில் அக்கறை காட்டுவீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிரிகள் தோல்வி அடைவார்கள். உங்களின் வெற்றிக்கு வாழ்க்கைத்துணையும், நண்பர்களும் உதவுவர்.

**துலாம்**
இன்று மகிழ்ச்சியான நிகழ்வுகள் நடக்கும். நட்பு வட்டம் விரியும். பொதுநல ஈடுபாட்டால் தொல்லைகள் வருவதற்கு வாய்ப்பு உள்ளது. பொறுமை இழந்து மற்றவர்களிடம் கடுமையாகப் பேச வேண்டாம்.

**விருட்சிகம்**
அரசு அதிகாரிகளுடன் புதிய தொடர்பு கிடைக்கும். தனிப்பட்ட விஷயங்களை யாரையும் நம்பி பகிர்ந்து கொள்ள வேண்டாம். பேச்சு, செயலில் கவனமாக இருப்போருக்கு பிரச்னையற்ற நாள்.

**தனுசு**
துணிச்சலாக ஈடுபடும் விஷயங்களில் கவனமாக இருக்கவும். உங்களின் எண்ணம் நிறைவேறும். தாயாரின் உடல்நலம் மேம்படும். பதவி உயர்வு பற்றிய நல்ல செய்தி கிடைக்கும்.

**மகரம்**
வீட்டை பழுதுபார்க்க இன்று முற்படுவீர்கள். மகிழ்ச்சி கூடும். உங்களின் கொள்கை நிறைவேறும். உடன்பிறந்தோருக்கு உதவுவீர்கள். யாரையும் சார்ந்து இருக்காமல் நீங்களே பாடுபடுங்கள்.

**கும்பம்**
குழந்தைப்பேறு வேண்டியவர்களுக்கு நற்செய்தி உண்டு. குழந்தைகள் பற்றிய பயம் தீர்ந்து சந்தோஷம் வரும். பணிபுரியும் இடத்தில் இருந்த சச்சரவு இன்று நீங்கும்.

**மீனம்**
குழந்தைப்பேறு வேண்டியவர்களுக்கு நற்செய்தி உண்டு. குழந்தைகள் பற்றிய பயம் தீர்ந்து சந்தோஷம் வரும். பணிபுரியும் இடத்தில் இருந்த சச்சரவு இன்று நீங்கும்.

# சிறையில் உள்ள 55 மீனவர்களையும் விடுவிக்க உடன் நடவடிக்கை தேவை

## முதலமைச்சர் ஸ்டாலினிடம் ஓ.பி.எஸ். கோரிக்கை



சென்னை, டிசெ. 21

இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட 55 மீனவர்களை விடுவிக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என சட்டப் பேரவை எதிர்க்கட்சி துணைத் தலைவர் ஓ. பன்னீர்செல்வம் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

“தமிழக மீனவர்களை ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி சிறை பிடிப்பதும், அவர்களுடைய படகுகளை சேதப்படுத்துவதும், அவர்களை மீன்பிடித் தொழில் செய்யாத அளவுக்கு துன்புறுத்துவதையும் இலங்கைக் கடற்படையினர் வாடிக்கையாகக் கொண்டிருந்தாலும், சமீப காலமாக இது போன்ற சம்பவங்கள் அடிக்கடி நிகழ்வது மீனவ மக்களை கடும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

18-12-2021 அன்று இராமேஸ்வரத்திலிருந்து 570 விசைப்படகுகளில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் அனுமதி பெற்று மீன்பிடித் தொழிலுக்காக கடலுக்குள் சென்றதாகவும், அவர்கள் கச்சத்தீவு அருகே இந்தியக் கடல் பகுதியில் நேற்று நள்ளிரவு மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்தபோது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் 6 விசைப்படகுகளுடன் 43 மீனவர்களைச் சிறைபிடித்தனர். இந்தச் சம்பவம் நடந்த ஒரு சில மணி நேரங்களில் மேலும் 12 மீனவர்கள் இரண்டு படகுகளுடன் இலங்கைக் கடற் படையினரால் சிறைபிடிக்கப்பட்டனர்.

தமிழ்நாட்டு மீனவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிப்பது மற்றும் மீன்பிடி உரிமையை காப்பது ஆகிய வற்றிற்கு முன்னுரிமை அளிக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் மாநில அரசிற்கு இருக் கிறது. இந்தக் கடமையை தமிழ் நாடு அரசு மேற் கொள்ள வேண்டும் என்பதுதான் தமிழக மீன வர்களின் - எதிர்பார்ப்பாக இருக்கிறது.

எனவே, முதல்வர் மு,க.ஸ்டாலின் இதில் உடனடியாகக் கவனம் செலுத்தி, சிறை பிடிக்கப்பட்ட 55 மீனவர்களை விடுவிக்கவும், உடைமைகளை அவர்களிடம் ஒப்படைக்கவும், இதுபோன்ற நிகழ்வுகள் இனி மேல் நிகழாமல் இருக்கவும் உரிய நடவடிக்கையை மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் மூலமாக எடுக்க வேண்டுமென்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.”

இவ்வாறு ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்

# முன்னாள் அ.தி.மு.க அமைச்சர் தங்கமணி தொடர்புடைய 14 இடங்களில் சோதனை

சென்னை, டிசெ. 21

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் தங்கமணிக்கு தொடர்புடைய 14 இடங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை மீண்டும் நேற்று அதிரடியாக சோதனை நடத்தியுள்ளது.

அ.தி.மு.க. ஆட்சியில் மின்சாரத்துறை அமைச்சராக செயல்பட்டவர் தங்கமணி. இந்நிலையில், அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் தங்கமணி வீடு மற்றும் அவருக்கு சொந்தமான இடங்களில் கடந்த 15ஆம் திகதி லஞ்ச ஒழிப்புத்துறையினர் அதிரடி சோதனை நடத்தினர். மொத்தம் 69 இடங்களில் இந்த சோதனை நடைபெற்றது. தங்கமணி மீது வருமானத்திற்கு அதிமான சொத்து சேர்த்ததாக கிடைத்த தகவலின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்யப்பட்டு இந்த சோதனை நடைபெற்றதாக லஞ்ச ஒழிப்புத் துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும் இந்த சோதனையின்போது கணக்கில் காட்டப்படாத ஏராளமான ரொக்கம், தங்கம், வெள்ளி, மற்றும் ஊழல் தொடர்பான ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் தங்கமணிக்கு தொடர்புடைய 14 இடங்களில் லஞ்ச ஒழிப்புத் துறை மீண்டும் சோதனை நடத்தினர்.

நாமக்கல் மாவட்டத்தில் 10 இடங்களிலும், ஈரோடு மாவட்டத்தில் 3 இடங்களிலும், சேலம் மாவட்டத்தில் ஒரு இடத்திலும் முன்னாள் அமைச்சர் தங்கமணிக்கு தொடர்புடைய மொத்தம் 14 இடங்களில் இந்த சோதனை நடைபெற்றதாக தகவல் வெளியாகியுள்ளது.

# சுற்றுச்சூழலுக்கு பாரிய சீர்கேடு அனல் மின் நிலையம் வேண்டாம்

## தமிழக அரசுக்கு சீமான் வலியுறுத்தல்

சென்னை. டிசெ. 21

சுற்றுச்சூழலுக்கு சீர்கேடு ஏற்படவதால் எண்ணூரில் அனல் மின் நிலையம் அமைக்க கூடாது என தமிழக அரசை நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்திக் கேட்டுள்ளார்.

இத தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

வடசென்னை எண்ணூரில் 660 மெகாவாட் திறன் கொண்ட புதிய அனல்மின் நிலையம் அமைக்கும் தமிழக அரசின் முடிவு அதிர்ச்சியளிக்கிறது. சூழலியல் சீர்கேட்டை விளைவித்து, காலநிலை மாற்றத்துக்கு காரணமாக அமையும் வகையிலான இத்திட்டத்தைச் செயல்படுத்த முனைவது எந்தவகையிலும் ஏற்புடையதல்ல. மக்களின் விருப்பத்துக்கும், மண்ணின் நலனுக்கும் எதிரான அனல் மின்நிலைய திட்டத்தை வலுக்கட்டாயமாகத் திணிப்பது கடும் கண்டனத்துக்குரியது.

இத்திட்டத்துக்கான மக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் வரும் ஜனவரி 6-ந்தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தாலும், தமிழ்நாடு அரசு தரப்பு இத்திட்டத்தில் இருக்கக்கூடியச் சிக்கல்களை முன்வந்து ஆராய வேண்டும். இத்திட்டம் கருத்துக்கேட்புக்கூட்டம் வரை கொண்டு செல்லப்படக் கூடாது. அனல் மின்நிலைய



திட்டத்தை உடனடியாகவும், முழுவதுமாகவும் கைவிட தமிழக அரசு முன்னேற்பாடுகளை விரைந்து செய்ய வேண்டும். அதற்கு நேர்மாறாக, இத்திட்டம் முன்நகர்ந்தால் இதன் தீயவிளைவுகளை எடுத்துரைத்து, மக்களைத் திரட்டி நாம் தமிழர் கட்சி மிகத்தீவிரமாகப் போராடும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# எரிபொருள் விலையை அதிகரிக்க கோருகிறார் மத்திய வங்கி ஆளுநர்



கொழும்பு, டிசெ. 21

எரிபொருள் விலையை விரைவில் அதிகரிக்குமாறு மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால், நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு டொலரை பயன்படுத்தினால், அந்நிய செலாவணி இல்லாமல் பெரும் நெருக்கடியை நாடு சந்திக்க நேரிடும் என்று நிதியமைச்சருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பெற்றோல் 35 ரூபாயாலும், டீசல் 24 ரூபாயாலும், மண்ணெண்ணெய் 11 ரூபாயாலும் உடனடியாக அதிகரிக்கப்பட்டு எரிபொருள் தேவையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும், இந்தக் கடிதத்துக்கு நிதி அமைச்சு இதுவரை பதிலளிக்கவில்லையென தெரிய வந்தது. (அ)

# சீனாவை பகைமை சக்தியாக தமிழ் மக்கள் பார்க்கக்கூடாது

## கூட்டமைப்பின் பங்காளியான ரெலோ கூறுகிறது

யாழ்ப்பாணம், டிசெ. 21

இலங்கை அரசாங்கத்தின் நேச நாடுகளை தமிழர்கள் ஒரு போதும் பகைச் சக்திகளாக பார்க்கக்கூடாது அவ்வாறு நினைத்தால் நீண்டகால அடிப்படையில் தமிழர்களுக்கு மிகப் பலவீனமாக அமையும். அந்த வகையில்தான் சீனா தொடர்பான விடயத்திலும் மிகவும் நிதானமாக சிந்திக்கவேண்டும் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சீனா தமிழர் தாயகப் பகுதியில் வருகை தருவதன் இராஜதந்திரத்தை சிங்கள ஆட்சியாளர்கள் எப்படி கையாள்கிறார்கள் என்பதை ஆய்வு செய்யாமல் எய்தவன் இருக்க அம்பை நோகும் நிலையில் சில தமிழ் அரசியல்வாதிகள் சீனாவுக்கு நிலங்களை குத்தகைக்கு கொடுக்கத் தயாராகும் இலங்கை அரசாங்கத்தை கேள்வி கேட்பதை விட்டு சீனாவைப் பார்த்து நீங்கள் தமிழர் தாயகத்துக்குள் வரவேண்டாம் , தமிழர்களுக்கு என்ன தீர்வு தருவீர்கள் என்ற சிறுபிள்ளைத்தனமான கேள்விகளை கேட்பது தமிழர்களின் எதிர்கால அரசியல் பயணத்துக்கு ஆரோக்கியமாக இல்லை.

சீனா தமிழர்களுக்கு என்ன தீர்வு தருவார்கள் என்று கேட்பதற்கு முன் தமிழர் தரப்பு என்ன கோரிக்கையை சீனாவிடம் முன் வைத்தீர்கள் என்ற கேள்விக்கு பதில் என்ன?

சீனாவின் மனிதவுரிமை விவகாரங்கள் கேள்விக்குரியதாக இருப்பது உண்மை. ஆனால், இன்று உலகில் சீனாவின் பகை சக்தியாக பேசப்படும் இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் பெருமளவு வர்த்தக உறவுகளை சீனாவுடன் பேணிக் கொண்டுதானே உள்ளன. அத்துடன் அண்மையில் அமெரிக்காவுக்கே டொலர் பிரச்னை ஏற்பட்டுள்ளாதாம். அதனை நிவர்த்தி செய்ய சீனாவிடமே டொலரைக் கடனாக பெற அமெரிக்கா தீர்மானம் ஒன்றை எடுத்துள்ளதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. காரணம் இன்று உலகில் அதிகூடிய டொலர் கையிருப்பு சீனாவிடம் தான் உள்ளது. அவர்களிடம் 4.5 ட்ரில்லியன் உள்ளதாம்.

சீனாவை பகைமைச் சக்தியாக வெளிப்படையாக விமர்சித்தல் தமிழர்களுக்கு இராஜதந்திர பின்னடைவாகவே அமையும். குறிப்பாக இலங்கை அரசாங்கத்தின் மிக நெருங்கிய சுப்பர் பவர் நாடுகளை தமிழர் தரப்பும் நெருங்கி உறவாடும் தந்திரத்தை கொண்டிருக்க வேண்டும். அதுவே இலங்கை அரசாங்கத்தின் தமிழர்களுக்கு எதிரான வெளிநாடுகளின் ஆதரவுத்தளத்தை பலவீனப்படுத்தும்-என்றார். (அ)

# அமெரிக்கா பறந்த பஸில் விரைவில் நாடு திரும்புவார்

## பொதுஜன பெரமுன கூறுகிறது




கொழும்பு, டிசெ. 21

**அமெரிக்கா சென்றுள்ள நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ விரைவில் நாடு திரும்புவாரென்று அமைச்சர் சி.பி. ரத்னாயக்க தெரிவித்தார்.**

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியல்வாதிகளும் மனிதர்களே, அவர்களுக்கும் தேவைகள் இருக்கும். சிலர் மருத்துவ தேவைக்காக வெளிநாடு செல்லலாம். காணி பிரச்னை இருக்கும், பிள்ளைகளின் பிரச்னை இருக்கும். இப்படி தனிப்பட்ட வாழ்வில் பல பிரச்னைகள் இருக்கலாம். அவற்றை தீர்க்க வேண்டும்.

எனவே, அரசியல்வாதிகளின் வெளிநாட்டுப் பயணங்களை , சுற்றுலா என கருதி மட்டும் விமர்சிக்கவேண்டாம். சாதாரண மனிதர்களுக்காக அவர்களுக்கும் தேவைகள் இருக்கக்கூடும்.

அவ்வாறானதொரு தேவைக்காக நிதி அமைச்சர் அமெரிக்கா சென்றிருக்கலாம். அவர் விரைவில் நாடு திரும்புவார்-என்றார். (அ)

## மேலும் 842, 400 பைஸர் நாட்டை வந்தடைந்தன!

கொழும்பு, டிசெ. 21

மருந்துக் கூட்டுத்தாபனத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட 842, 400 பைஸர் தடுப்பூசிகள் எடுத்துவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று காலை இந்த தடுப்பூசி எடுத்துவரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எமிரேட்ஸ் விமான சேவைக்கு சொந்தமான விமானம் மூலம் குறித்த தடுப்பூசி தொகை எடுத்துவரப் பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

குறித்த தடுப்பூசிகள் கொழும்பிலுள்ள மத்திய களஞ்சிய வளாகத்துக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.(அ)

# நாட்டை முடக்கும் தீர்மானம் இல்லை

கொழும்பு, டிசெ. 21

கிறிஸ்மஸ் பண்டிகை மற்றும் புத்தாண்டு காலத்தில் நாட்டை முடக்குவது குறித்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன நேற்று இந்த அறிவிப்பை விடுத்தார்.

எனினும், கொரோனா தொற்று பரவுவதைத் தடுப்பதற்கு தேவையான சுகாதார நடைமுறைகளை மக்கள் முழுமையான பின்பற்றவேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

கொரோனா தொற்றின் ஒமைக்ரோன் மாறுபாடு உறுதியான 4 பேர் நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் மக்கள் பொறுப்புடன் செயற்படவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார். (அ)

# ஜனாதிபதியின் செயலர் ஜயசுந்தர நிதி அமைச்சுக்கு மாற்றப்படலாம்?



கொழும்பு, டிசெ. 21

ஜனாதிபதியின் செயலாளர் பதவியிலிருந்து பி.பீ. ஜயசுந்தர நீக்கப்படும் பட்சத்தில் அவருக்கு நிதி அமைச்சின் ஆலோசகர் பதவி வழங்கப்படலாம் என அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியின் செயலாளர் பதவியிலிருந்து பி.பீ. ஜயசுந்தரவை நீக்குமாறு அமைச்சர் சமல் ராஜபக்ஷ திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

இந்நிலையில் இது தொடர்பில் ஆராய்வதற்காக சில நாட்களுக்கு முன்னர் அமைச்சர் சமல் ராஜபக்ஷவின் வீட்டில் ராஜபக்ஷக்கள் ஒன்றுகூடியுள்ளனர்.

இதன்போது, ஜனாதிபதி ஆலோசகராக பி.பீ. ஜயசுந்தரவை நியமிக்குமாறு பிரதமரமே தனக்கு ஆலோசனை வழங்கினார் எனவும், இதனால் இது விடயத்தில் தனக்கு முடிவெடுக்கமுடியாதெனவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் பி.பீ.ஜயசுந்தரவை நீக்குவது ஏற்புடைய நடவடிக்கை அல்ல, அமைச்சரவை செயலாளர்களை மாற்றும்போது அதனை செய்யலாம், அவ்வாறு செய்தாலும் அவருக்கு நிதி அமைச்சின் ஆலோசகர் பதவி வழங்கப்படும் என பஸில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, ஜயசுந்தர வழங்கிய இராஜினாமா கடித்தத்தை ஏற்க ஜனாதிபதி மறுப்பு தெரிவித்திருந்தாலும், செயலாளர்கள் மாற்றத்தின்போது அவர் மாற்றப்படவுள்ளாரென அறியமுடிகின்றது. (அ)

# 43 தமிழக மீனவர்கள் மறியலில்

யாழ்ப்பாணம், டிசெ. 21

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 43 பேரையும் யாழ். சிறையில் தடுத்துவைக்க ஊர்காவற்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இராமேஸ்வரத்திலிருந்து கடந்த சனிக்கிழமை 570 விசைப்படகுகளில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றனர். அவர்கள் நள்ளிரவில் கச்சதீவு மற்றும் நெடுந்தீவு அருகே இலங்கைக் கடலில் அத்துமீறி மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அங்கு சென்ற இலங்கைக் கடற்படையினர் 6 விசைப் படகுகளுடன் 43 மீனவர்களை கைது செய்தனர்.

இவர்களைத் தொடர்ந்து மேலும் 12 மீனவர்களையும், 2 விசைப்படகுகளையும் நேற்று முன்தினம் கடற்படையினர் கைது செய்தனர். 8 விசைப் படகுகள், 55 மீனவர்கள் எல்லைத் தாண்டி மீன்பிடித்ததாக இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இச்சம்பவம் தமிழக மீனவர்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதனிடையே இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களை விடுவிக்க வலியுறுத்தி காலவரையற்ற வேலைநிறுத்த போராட்டத்தை ராமேஸ்வரம் மீனவர்கள் அறிவித்துள்ளனர்.

இந்த நிலையில் கைதான மீனவர்களில் 43 பேர் நேற்று முன்தினம் ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்டனர். இதனையடுத்து அவர்கள் அனைவரையும் டிசெம்பர் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-02-03)

# முதலாம் தர மாணவருக்கான கற்றல் ஏப்ரலில் ஆரம்பமாகும்

கொழும்பு, டிசெ. 21

எதிர்வரும் ஏப்ரல் முதல் முதலாம் தர மாணவர்களுக்கான கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளின் தவணைகள் எதிர்வரும் 23 ஆம் திகதி முடிவடைந்து மீண்டும் ஜனவரி 3 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என அவர் கூறினார்.

5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை ஜனவரி மாதத்தின் மூன்றாம் வாரத்தில் இடம்பெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், க.பொ.த உயர்தரப் பரீட்சை பெப்ரவரி மாதத்திலும், க.பொ.த சாதாரண தரப் பரீட்சை மே மாதத்திலும் இடம்பெறும் என அவர் மேலும் கூறினார். (அ)

# நாடு நெருக்கடியில் சிக்கியிருக்க வெளிநாடுகளுக்கு அமைச்சர்கள்!

## சுசில் பிரேமஜயந்த கடும் அதிருப்தி



**கொழும்பு, டிசெ. 21**

**நாட்டில் அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அந்நிய செலாவணி கையிருப்பில் இல்லாத பின்னணியில் சில அமைச்சர்கள் வெளிநாடு சென்றுள்ளமைக்கு இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.**

கண்டியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், நெருக்கடியான காலங்களில் எவராவது நாட்டை விட்டு வெளியேறுவார்களா என்றும் கேள்வியெழுப்பினார்.

அரசாங்கத்தை அமைக்கும்போது துறைசார்ந்த அறிவும், புரிதலும் இருப்பவர்களை அருகில் வைத்துக்கொண்டிருந்தால், தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை உருவாகியிருக்காது என்பது இதில் புலப்படுவதாகவும் சுசில் பிரேமஜயந்த சாடினார்.

மேலும் யுத்த காலத்தில் ஐந்து வருடங்கள் கல்வி அமைச்சராக தாம் பதவி வகித்ததாகத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர், அந்த நேரத்தில் எந்தவொரு பிரச்னையும் இன்றி தனது கடமைகளை ஆற்ற முடிந்ததாக கூறினார். (அ)

# வைத்தியர் போராட்டம் நாட்டுக்கு பாதகமானது

## தீர்வை வழங்குமாறு செந்தில் வலியுறுத்து



கொழும்பு, டிசெ. 21

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் மேற்கொண்டுள்ள பணிப்பகிஷ்கரிப்பின் காரணமாக நாட்டின் வைத்தியத்துறைக்கு பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதுடன், பொதுமக்களும் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். அரசாங்கம் உடனடியாக அவர்களது கோரிக்கை தொடர்பில் பரிசீலனை மேற்கொண்டு இருதரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சுமூகமான தீர்வை வழங்க வேண்டுமென இ.தொ.காவின் உபத் தலைவரும் பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகள் இல்லாது சுகாதார அமைச்சினால் 500 வைத்தியர்களுக்கான நியமனப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளதாக எதிர்ப்பு தெரிவித்து அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தீர்மானத்தின் பிரகாரம் அரச வைத்தியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர். இதனால் நாட்டில் வைத்தியத்துறை பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது.

வைத்தியசாலைகளுக்கு மருத்துவத் தேவைக்காக செல்பவர்கள் முதல், வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுபவர்களும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் கோரிக்கைகள் தொடர்பில் சுமூகமான தீர்வை வழங்க வேண்டும்.

அரச வைத்திய அதிகாரிகளின் போராட்டங்களால் பொது மக்கள் தான் பாரிய பாதிப்புகளுக்கு உள்ளாகவேண்டிய சூழ்நிலை ஏற்படும். வைத்தியத்துறையில் தொழிற்சங்க நடவடிக்கை என்பது நாட்டுக்கு பெரும் ஆபத்தான விடயமாகும்.

ஆகவே, அரசாங்கம் உடனடியாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் கோரிக்கைள் தொடர்பில் சுமூகமான தீர்மானம் எடுக்க வேண்டும்-என்றார். (அ)

# சீனத் தூதர் கூறிய கருத்தில் கரிசனை கொண்டுள்ளோம்

## சுரேன் ராகவன் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, டிசெ. 21

சீன தூதுவர் வடக்கில் தெரிவித்த கருத்தில் கரிசனை கொண்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

ஓமந்தை மத்திய கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் சீன தூதுவரின் வடக்கு விஜயம் தொடர்பாக ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே, அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை சுயாதீனமான சுதந்திரமான நாடு என்ற ரீதியிலும் எங்கள் எதிர்காலத்துக்காகவும் வெளிவிவகார உறவை எங்கள் நாட்டின் பெருமைக்காகவும் தனித்தன்மைக்காகவும் பாவிக்க வேண்டியதாக உள்ளது.

இலங்கை ஒரு நாட்டின் பகடைக்காயாக மாறக்கூடாது. அண்மையில் இடம்பெற்ற சீனத் தூதுவரின் விஜயம் கேள்விக்குறியாக இருக்கிறது என்பதைவிட அவர் அங்கே கூறிய கருத்துக்கள் எமக்கு கரிசனையாக இருக்கின்றது.

அவை இந்தியாவையும் இலங்கையையும் பகை செய்யும் விடயங்களாக சிலர் ஊடகங்களில் கூறியிருக்கிறார்கள். இந்தியா எங்கள் தொப்புள் கொடி உறவு, எங்கள் உண்மையான தாய்நாடு, அங்கிருந்து வந்த மதம், மொழி எல்லாமே எங்களுக்கு சொந்தமாகியிருக்கின்றன.

எனவே இந்தியாவுடனான உறவை முறிவடைய விடக்கூடாது என்ற நம்பிக்கையில் நான் இருக்கிறேன். எனவே வருகின்ற நாட்களில் இந்த அரசியல் விடயம் குறித்து மிக கவனமாக இருக்கவேண்டும்-என்றார். (அ)






# புதுக்குடியிருப்பு சிறுமிக்கு நீதி கேட்டு நேற்று பேரணி

## கைதானவர் பொலிஸ் தடுப்புக் காவலில்

முல்லைத்தீவு, டிசெ. 21

புதுக்குடியிருப்பில் சடலமாக மீட்கப்பட்ட மாணவிக்கு நீதி கேட்டு நேற்று கவவீர்ப்புப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு சிவில் சமூக அமைப்புகள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டத்தின் இடை நடுவே வீதியில் பயணித்த புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர், ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பேசி வழங்கிய உறுதி மொழிகளையடுத்து பேரணி முடிவுக்கு வந்தது.

புதுக்குடியிருப்பு மூங்கிலாறு பகுதியைச் சேர்ந்த யோகராசா நிதர்ஷனா (வயது-12) என்ற சிறுமி 3 நாள்களாக காணாமற்போன நிலையில் வீட்டுக்கு அண்மையாகவுள்ள பற்றைக் காணிக்குள் சடலமாக மீட்கப்பட்டார்.

அவரது அந்தரங்க உறுப்பில் ஏற்பட்ட காயமே உயிரிழப்புக்கு காரணம் என சட்ட மருத்துவ வல்லுநரின் பரிசோதனையில் தெரியவந்தது.

இந்த நிலையில் சிறுமியின் மூத்த சகோதரியின் கணவர் புதுக்குடியிருப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார். சந்தேக நபர் நேற்று முன்தினம் முல்லைத்தீவு நீதிமன்றில் முற்படுத்தார்.

சந்தேக நபரை 72 மணித்தியாலங்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க முன்வைக்கப்பட்ட விண்ணப்பத்துக்கு முல்லைத்தீவு நீதிமன்றம் அனுமதியளித்தது.

அத்துடன், சிறுமியின் வீட்டை தடயவியல் பொலிஸாரின் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சிறுமி கடந்த 15ஆம் திகதி காலை 7 மணிக்கு காணாமற்போனார் என்று தாயார் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# பூஸ்டர் கட்டாயம்!

## சந்திம ஜீவந்தர வேண்டுகோள்



கொழும்பு, டிசெ. 21

இரண்டாவது கொரோனாத் தடுப்பூசியைப் பெற்று மூன்று மாதங்களின் பின்னர் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளுமாறு ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோய் எதிர்ப்பு மற்றும் மரபணு உயிரியல் நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.

இது தொடர்பில் ருவிட்டர் பதிவொன்றை இட்டுள்ள அவர்,

"நாட்டில் பயன்படுத்தப்படும் கொரோனாத் தடுப்பூசிகளால் உருவாக்கப்படும் நோய் எதிர்ப்பு சக்தி மூன்று மாதங்களில் குறைவடைகின்றது.

இதற்கமைய சினோபார்ம் தடுப்பூசியால் உருவாக்கப்படும் எதிர்ப்பு சக்தியே விரைவாகக் குறைவடைகின்றமை ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

இரண்டாவது தடுப்பூசியாக மொடேர்னா தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்களின் நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாகவுள்ளது.

இதனைத் தொடர்ந்து அஸ்ட்ராசெனகா மற்றும் ஸ்புட்னிக்-வி முதலாம் தடுப்பூசிகள் முறையே எதிர்ப்பு சக்தியை அதிகமாக வெளிப்படுத்தியுள்ளன.

சினோபார்ம் தடுப்பூசி தற்போது அதிகளவில் பயன்படுத்தப்படும் கொரோனாத் தடுப்பூசியாகும்.

இலங்கையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை மற்றும் மரணித்தவர்களின் எண்ணிக்கை என்பன குறைவடைந்தமைக்குச் சினோபார்ம் தடுப்பூசி சிறந்த பங்களிப்பை வழங்கியுள்ளது.

எவ்வாறாயினும் முதல் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்று கொரோனாத் தொற்று உறுதியானவர்கள் ஆறு மாதங்களுக்குப் பின்னர் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும்" - என்றார். (அ)

# கடினமான தீர்மானங்களை நோக்கி நகர்கின்றது அரசு!

## அமைச்சரவை இணைப்பேச்சாளர் கூறுகிறார்



**கொழும்பு, டிசெ. 21**

**எதிர்காலத்தில் சில கடினமான தீர்மானங்களை மேற்கொள்ளவேண்டி ஏற்படும் என அமைச்சரவை இணை பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.**

கடந்த இரண்டு வருடங்களாக நாட்டுக்கு டொலர் வருமானத்தில் பாரியளவு இழப்பு ஏற்பட்டதன் காரணமாக, நாட்டின் பொருளாதாரத்துக்கு கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்வது தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரையாடப்படவில்லை எனவும், இதுவரை இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

மேலும், கடன் வாங்கும் எண்ணம் அரசுக்கு இல்லை என்றும், ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளாக நாடு பொருளாதார ரீதியாக மிகவும் கடினமான சூழ்நிலையில் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# கிழக்கு கொள்கலன் முனையத்தின் அபிவிருத்தி ஜனவரி 3இல் ஆரம்பம்!

கொழும்பு, டிசெ. 21

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தின் அபிவிருத்தி எதிர்வரும் ஜனவரி மாதம் 3ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

வர்த்தக மற்றும் கைத்தொழில் முற்போக்கு ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஷியாமல் சுமணரத்ன, இந்த முனையம் நாட்டின் பொருளாதாரத்துக்கு பாரிய சொத்தாக அமையும் என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனவரியில் திட்டத்தை தொடங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

கிழக்கு கொள்கலன் முனையம் சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது. அதனை அபிவிருத்தி செய்வதற்கு கடந்த நல்லாட்சி அரசாங்கம் எடுத்த தீர்மானத்தை மாற்றியமைக்க ஜனாதிபதி தலைமையிலான தற்போதைய நிர்வாகம் பெரும் முயற்சி செய்தது.

துறைமுக அதிகாரசபையுடன் இணைந்த தொழிற்சங்கங்கள் திட்டத்தைத் தொடங்குவதற்கும் முனையத்தைப் பாதுகாப்பதற்கும் அயராது உழைத்தன.

இந்த முனையத்தின் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில் துறைமுக அதிகாரசபைக்கு பெரும் பங்காற்ற முடியும்-என்றார். (அ)

# சப்புகஸ்கந்தை எண்ணெய் நிலையத்தை மீண்டும் மூடுவதற்கு அரசு தீர்மானமா?

கொழும்பு, டிசெ. 21

சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத் திகரிப்பு நிலையத்தை மீண்டும் மூடுவதற்கு அரசாங்கம் நட வடிக்கைகள் மேற்கொண்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இறக்குமதி செய்யப்பட்டுள்ள மசகு எண்ணெய் நாட்டை வந்தடைவதில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாகவே, இவ்வாறு குறித்த சுத்திகரிப்பு நிலையத்தை மூடுவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் தற்காலிகமாக மூடப்பட்டிருந்த சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் கடந்த 7 ஆம் திகதி மீண்டும் திறக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் பேச்சாளர் ஒருவர், மசகு எண்ணெய் தாங்கிய கப்பல் நாட்டை வந்தடைவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

எனினும் சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மூடுவதற்கு இது வரை எந்தவொரு தீர்மானமும் எடுக்கவில்லை யென அவர் கூறினார். (அ)

# அமைச்சரவை மறுசீரமைப்புக்கு பிரதமர் மஹிந்த கடும் எதிர்ப்பு

## அரச நிர்வாகக் கட்டமைப்பில் மட்டுமே மாற்றம்

கொழும்பு, டிசெ. 21

2022 ஜனவரி முற்பகுதியில் அமைச்சரவை மறுசீரமைப்பு இடம்பெறாதெனவும், அரச நிர்வாகக் கட்டமைப்பில் முக்கியமான சில மாற்றங்கள் வரவுள்ளதெனவும் அரச வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

2022 ஜனவரி 18 ஆம் திகதி புதிய பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் அமைச்சரவையும் மறுசீரமைக்கப்படும் என தகவல்கள் வெளியாகின. இதற்கான ஏற்பாடுகளும் அரச மேல் மட்டத்தில் இடம்பெற்றுவந்தது.

எனினும், அமைச்சரவை மாற்றத்துக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எதிர்ப்பை வெளியிட்டுள்ளதால், அந்த முயற்சி இடைநிறுத்தப்பட்டுள்ளதென அறியமுடிகின்றது.

அமைச்சரவையை மறுசீரமைப்பதைவிடவும், அரச நிர்வாகக் கட்டமைப்பை மறுசீரமைப்பதே சிறந்ததென சிரேஷ்ட உறுப்பினர்களால் பிரதமருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி அமைச்சுக்களின் செயலாளர்கள், அரச நிறுவனங்களின் பிரதானிகள், திணைக்களப் பிரதானிகள் என முக்கிய பதவிகளில் மாற்றங்கள் இடம்பெறவுள்ளன. (அ)

# இனவாதம் இல்லாத அரசை உருவாக்கி நாட்டை பொறுப்பெடுக்க சஜித் தயார்!

## கூறுகிறார் நளின் பண்டார



கொழும்பு, டிசெ. 21

இந்த அரசாங்கம் அப்பாவி மக்களை பற்றி சிந்திப்பதில்லை. ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தை பாரமெடுக்க எப்போதும் தயாராக உள்ளோம். அதன் பின்னர் மக்களின் பிரச்னைகளை சுமுகமாக தீர்த்து வைப்போம். இந்த நாட்டை ஊழலில்லாமல் ஆட்சி செய்ய ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாஸவினால் முடியும். இனவாதத்தை கிளறி ஆட்சியை கைப்பற்றிய இந்த அரசாங்கம் கொலை, கொள்ளைகளை செய்துவருகிறது என குருநாகல் மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

சம்மாந்துறை பிரதேச விவசாயிகளின் பிரச்னைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் ஒன்று ஐக்கிய மக்கள் சக்தியின் சம்மாந்துறை தேர்தல் தொகுதியின் பிரதம அமைப்பாளர் எம்.ஏ. ஹஸனலியின் தலைமையில் சம்மாந்துறை அப்துல் மஜீத் மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற போது அந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய தேசிய கட்சியினரால் கடந்த 1994 இற்கு பிறகு இந்த நாட்டில் ஜனாதிபதி ஒருவரை உருவாக்க முடியாமலே போகிவிட்டது. 1994 இற்கு பின்னர் சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ போன்றவர்கள்தான் ஜனாதிபதியாக வந்தார்கள். அவர்கள் விவசாயிகளுக்கு சரியான வசதிகளை செய்துகொடுக்கவில்லை. ஐக்கிய தேசிய கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவினால் எவ்வளவு முயன்றும் எமது நாட்டின் ஜனாதிபதியாக வரமுடியாமல் போனது. பிரதமராகத்தான் இறுதியாக அவரால் வர முடிந்தது. ஐக்கிய தேசிய கட்சியின் சார்பிலான ஜனாதிபதியாக இருந்த பலரும் விவசாயிகளுக்கு செய்த நல்ல விடயங்களை போன்று அவரால் கூட கடந்த காலங்களில் விவசாயிகளின் பிரச்னைகளுக்கு ஒழுங்கான தீர்வை முன்வைக்க முடியாமல் போனது.

பசளை, கிருமிநாசிகள் என எதுவுமில்லாது விவசாயிகள் கஷ்டப்படுகின்றனர். இந்த பிரச்னைகளுக்கு காரணம் கோட்டாபய இந்த நாட்டின் ஜனாதிபதியானதே. அவர் முன்வைக்கும் திட்டங்கள் யாவும் மூடத்தனமாக உள்ளன.

நாட்டில் இப்போது எரிவாயு,பால்மா, மரக்கறி, எரிபொருள், டொலர் என எதுவுமில்லை. வரிசையில் நின்று மக்கள் அத்தியாவசிய பொருள் வாங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. விவசாயம் என்பது நெற் செய்கை மட்டுமல்ல. மரக்கறி முதல் ஏற்றுமதிப் பயிர்கள் என எல்லாம் அதில் அடங்கும். எதிர்வரும் புதுவருடத்தில் இருந்து சோற்றுக்கு மிகப் பெரிய பஞ்சம் ஏற்படும். சீனி முதல் பல்வேறு பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் வாய்ப்புள்ளது. கடந்த காலங்களில் சீனியில் பாரிய மோசடி நடந்தது. இப்போது விவசாயிகளை காட்டி இந்த அரசாங்கம் கடுமையாக கொள்ளையடிக்கிறது.

இலங்கையில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ மக்கள் ஒற்றுமையாகவே வாழ்கிறார்கள். அவர்களின் ஒற்றுமையை சீரழிப்பது அரசியல்வாதிகளே. ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாஸ மக்களை ஒற்றுமையாக வாழச்செய்ய பல்வேறு திட்டங்களை வைத்துள்ளார். விவசாயிகளுக்கு தேவையானவற்றை வழங்க ஐக்கிய மக்கள் சக்தி அரசினால் முடியும். அதனால் ஐக்கிய மக்கள் சக்தியை பலப்படுத்த எல்லோரும் எங்களின் விவசாய அமைப்புக்களுடனும் கட்சியுடனும் இணைந்து பயணியுங்கள்-என்றார். (அ)

# 60 இலட்சம் டொலருக்காக சீனாவை பகைக்கக்கூடாது!

## அமைச்சர் ஜோன்ஸ்டன் கருத்து



கொழும்பு, டிசெ. 21

சீன உரக் கப்பலுக்கு நட்டஈடு வழங்கப்படாவிட்டால் நாட்டுக்கு பாரிய இழப்பு ஏற்படும் என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர் பெர்னாண்டோ, சீனா போன்ற சக்தி வாய்ந்த நாட்டை புண்படுத்துவது நல்லதல்ல என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

60 இலட்சம் அமெரிக்க டொலர்களுக்காக மற்றொரு நாட்டைப் புண்படுத்துவதை விட, கடன் கடிதத்தின் விதிமுறைகளின்படி சட்டபூர்வமாக சிக்கல்களைத் தீர்க்க முயற்சிக்க வேண்டும்.

இதுபோன்ற பிரச்னைகளை நாடுகள் இணக்கமான முறையில் தீர்க்கவேண்டும்.

இலங்கைக்கு தேவையிருந்த போது சீனா 150 கோடி அமெரிக்க டொலர்களை வழங்கியது.

யுகதனவி மின் உற்பத்தி நிலைய ஒப்பந்தத்தினால் நாட்டுக்கு எவ்வித நட்டமும் ஏற்படாது.

இந்த ஒப்பந்தம் நாட்டின் மின்சாரக் கட்டணத்தை குறைக்க வழிவகுக்கும். ஒரு யுனிட் மின்சாரத்தின் விலை 30 முதல் 50 சதவீதம் வரை குறையும்.

தெற்காசியப் பிராந்தியத்தில் இலங்கையில் அதிகளவு மின்சாரக் கட்டணம் உள்ளது. கட்டணக் குறைப்பை யார் விரும்பமாட்டார்கள்?

யுகதனவி ஒப்பந்தம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க வெளியிட்ட அறிக்கைகள் பொய்யானவை-என்றார்.

# எழுவர் விடுதலை;

இரா.செந்தில் கரிகாலன்

# நிதிமன்றம் சொன்ன பின்னரும் விடுதலையாகாமலிருப்பது என்?

‘ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 30 ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறையிலிருக்கும் ஏழு பேரை விடுதலை செய்யும் தமிழக அரசின் தீர்மானத்தின் மீது ஆளுநர் விரைந்து நட வடிக்கை எடுக்க வேண்டும்’ என்று உச்ச நீதிமன்றம் தொடர்ந்து அறிவுறுத்திவரு கிறது.

இம்மாதம் முதல் வாரத்தில் நடந்த விசாரணையிலும்கூட ‘எழுவர் விடுதலையில் முடி வெடுக்கும் அதிகாரம் ஆளு நருக்கு இருக்கிறது. அதேசமயம் கால தாமதம் செய்வதை ஏற்க முடியாது’ என்று கூறியிருக் கிறது உச்ச நீதிமன்றம்.

இந்த நிலையில், சிறையில் இருக்கும் ஏழு பேரின் குடும் பத்தினர் என்ன சொல்கிறார் கள்?



**மதிசுதா, சாந்தனின் சகோதரர், இலங்கை**

“நான் இந்தியா வந்து சிறையில் என் அண்ணனைப் பார்த்திருக்கிறேன். ஆனால், முதுமையில் இருக்கும் அம்மாவால் இந்தியா வந்து அண்ண னைப் பார்க்க முடியவில்லை. என் அண்ணன் குற்றம் செய்தாரா, இல் லையா என்பது ஒருபுறம் இருக்கட்டும்.

முப்பதாண்டுகளுக்கும் மேலாக தண்டனை அனுபவித்துவருகிறார்கள். இந்தியா, உலகின் மிகப்பெரிய ஜன நாயக நாடு. ஜீவகாருண்யத்தைப் போதிக்கும் நாடு. அந்த வகையில் அவர்களை மன்னித்து விடுதலை செய்யுங்கள்.

தவிர, சட்டரீதியாகவும் எழுவரின் விடுதலையில் காலம் தாழ்த்தாமல் முடிவெடுக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றமும் தெரிவித்திருக்கிறது. இதை அடிப்படையாகக்கொண்டு தமிழக முதல்வர், முன்பு வாக்குறுதி அளித்தபடி ஏழு பேரையும் விடுதலை செய்ய வேண்டும்.

எங்கள் அப்பா, அண்ணனைப் பார்க்காமலேயே இறந்துவிட்டார். அம்மாவுக்கும் ஒரு கண்ணில் பார்வை போய்விட்டது. இன்னொரு கண்ணால், அண்ணாவின் விடுதலை பற்றி செய்தி வருமா என்றே எப்போதும் செய்தி சனல்களைப் பார்த்துக்கொண்டிருப்பார். அவர் இறப்பதற்கு முன்பாக ஒரு நாளே னும் அண்ணனுடன் இருக்க விரும்பு கிறார்.”

**கமலராணி, ரோபர்ட் பயஸின் தாயார், இலங்கை**

“30 வருஷமா என் புள்ளை ஒருபக்கம், அவன் மனைவி ஒருபக்கம், மகன் ஒருபக்கம் என எங்கள் குடும்பமே சிதறுண்டு போய்க் கெடக்கு. என் பிள்ளையைப் பார்த்துட்டுத்தான் கண் மூடணும்னு, என் உயிரைக் கையில புடிச்சுக்கொண்டு காத்துக் கெடக்கேன். முப்பது வருஷத்துக்கும் மேல, என் பிள்ளையை ஏன் சிறையிலவெச்சு கஷ்டப்படுத்துறாங்க.

சட்டமே அவங்கள விடுதலை பண்ணலாம்னு சொன்ன பின்னாடியும் ஏன் சிறையில வெச்சிருக்காங்கன்னு தெரியலை. இந்திய அரசையும், தமிழ்நாட்டு அரசையும் வேண்டிக் கேட்டுக்குறேன், என் பிள்ளையை தயவுசெய்து விடுதலை செய்யுங்கோ.”

**ராஜேஸ்வரி, முருகனின் சகோதரி, லண்டன்**

“என் தம்பி முருகனும், அவரின் மனைவி நளினியும் முப்பதாண்டு களுக்கும் மேலாகச் சிறையில் வாடி வருகிறார்கள். தங்கள் வாழ்வின் பெரும்பகுதியை அவர்கள் சிறையில் கழித்துவிட்டார்கள். மீதிமிருக்கும் காலத்திலாவது, அவர்களுடைய வயது முதிர்ந்த பெற்றோருடன் கழிக்க மாட் டார்களா என்கிற ஏக்கம் அவர்களுக்கும் எங்களுக்கும் இருக்கிறது.

தமிழக முதல்வர் நினைத்தால் கண்டிப்பாக அவர்களை விடுதலை செய்ய முடியும். உரிய சட்ட நடவடிக்கைகளை எடுத்து, தமிழக முதல்வர் அவர்களை விடுதலை செய்வார் என்கிற நம்பிக்கை எங்களுக்கு முற்று முழுதாக இருக்கிறது. விரை வில் அவர்களை விடுதலை செய்து எங்களின் கண்ணீ ரைத் துடைக்க வேண்டும்.”



**அற்புதம்மாள், பேரறிவாளனின் தாயார், ஜோலார்பேட்டை**

“என் மகன் விடுதலை வழக்கின் இறுதி விசாரணை வரும் பெப்ரவரி 3 ஆம் திகதி உச்ச நீதிமன்றத்துக்கு வரு கிறது. மூத்த வழக்கறிஞரை அமர்த்தி தமிழக அரசும் விடுதலைக்குத் துணை நிற்கிறது. தமிழக அரசின் துணையுடன் 31 ஆண்டுக்கால போராட்டம், எனது கண்ணீரை முடிவுக்குக் கொண்டுவரும்... நீதி கிடைக்கும். பெப்ரவரி 3ஆம் திகதி என் மகன் விடுதலையாகி வரு வான்.”

**ராஜேஸ்வரி, ரவிச்சந்திரனின் தாயார், அருப்புக்கோட்டை**

“கண்டிப்பா என் மகனை விடுதலை செய்திடுவாங்கன்னு எதிர்பார்ப்போட இருக்கோம். தமிழக முதல்வர் அதற்கான நடவடிக்கைகளை எடுப்பார்னு நம்பிக்கை இருக்கு. அதுவரைக் கும் பரோலை நீட்டிக்கணும்னு கேட்டுக்குறோம். என் உடல் நிலையும் சரியா இல்லை. பைய னோட இருக்குற நேரம்தான் மனசுக்கு நிம்மதியா இருக்கு. இந்த அரசு நல்ல முடிவா எடுக்கணும்னு கேட்டுக்குறோம்.”

**பத்மாவதி, நளினியின் தாயார், சென்னை**

“உச்ச நீதிமன்றம், எழுவர் விடுதலை யில் தமிழக ஆளுநர் முடிவெடுக்கலாம் என்கிற கருத்தை வலியுறுத்தியுள்ளது. அதன் அடிப்படையில் நளினி உட்பட அனைவரையும் விடுதலை செய்ய தமிழக அரசு மீண்டும் ஒருமுறை ஆளுநரை வலியுறுத்த வேண்டும்.”

**ஜெனந்தன், ஜெயக்குமாரின் சகோதரர், ஜேர்மனி**

“எங்கள் அப்பா முப்பது வருடங்க ளாக என் அண்ணனின் முகத்தைக்கூடப் பார்க்காமல் இறந்துபோய்விட்டார். ஒவ்வொரு நாளும் அண்ணனைப் பார்க்க வேண்டும் என்கிற வலியோடும் கஷ்டத் தோடும்தான் அவர் வாழ்ந்து மறைந்தார். அவர் இறப்புக்குக்கூட அண்ணனால் வர முடியவில்லை. எங்கள் அம்மாவுக்கு 80 வயதாகிவிட்டது.

அவரும் நோய்வாய்ப்பட்டு, நித்தமும் அண்ணனின் சிந்தனையோடே வாழ்ந்து வருகிறார். என் அண்ணன் மட்டுமல்லா மல், என் சகோதரியின் கணவர் ராபர்ட் பயஸும் சிறையில் இருப்பதால், எங்கள் அம்மா மிகவும் வேதனையில் தவிக் கிறார்.

இந்தியாவில் ஒவ்வொரு முறை ஆட்சி மாற்றம் வரும்போதும், எங்கள் அண்ணன் விடுதலையாகிவிடுவார் என்று நம்பிக்கையோடு இருந்து ஏமாந்துதான் போவோம். இந்தமுறை, முதல்வர் ஸ்டாலின் தேர்தல் பரப்புரையில் ‘ஏழு பேரையும் விடுதலை செய்வோம்’ என வாக்குறுதி கொடுத் திருந்தார். அவர்மீது எங்களுக்கு மிகுந்த நம்பிக்கை இருக்கிறது. அவரின் முயற்சிக்கு மத்திய அரசும் ஒத்துழைக்க வேண்டும்.” **- விகடன்**




அகிலன்

**இராஜதந்திரிகள் வடபகுதிக்கு விஜயம் செய்வதும் புதிதல்ல. ஆனால், சீனத் தூதுவரின் விஜயமும், அவர் வட பகுதியில் அவர் மேற்கொண்ட செயற்பாடுகளும், அவர் தெரிவித்த கருத்துக்களும் பிராந்திய அரசியலில் வட பகுதியை மையப்படுத்திய ஒரு வியூகத்தை சீனா அமைக்கின்றது என்பதைத் தெளிவாகக்காட்டு கின்றது.**

# இது முடிவு மட்டுமல்ல ஆரம்பமும்! சீனத் தூதுவர் சொன்னது எதற்கு?

இந்தியக் கடல் எல்லையில் உள்ள இராமர் பாலத்தை வெள்ளிக்கிழமை நண்பகல் இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ செனஹொங் பார்வையிட்டு வடபகுதிக்கான தமது பயணத்தை முடிவுக்குக் கொண்டுவந்தார். அப்போது அவர் தெரிவித்த வசனம்தான் “இது முடிவு மட்டுமல்ல ஆரம்பமும்” என்பது. தனது தற்போதைய விஜயத்தை முடிவுக்குக் கொண்டுவந்தாலும், வடக்கில் சீனாவின் செயற்பாடுகள் தொடரும் என்பதை இதன் மூலமாக அவர் சர்வதேசத்துக்குத் தெளிவாக உணர்த்தியிருக்கின்றார். இந்தியாவுக்கு சவால்விடும் வகையில் அதிவேக வோர்ட்டர் ஜெட் படகில் இந்திய கடல் எல்லை வரை வென்று இராமர் பாலத்தை பார்வையிடடு, அப்பகுதியில் சுமார் அரை மணி நேரம் தரித்து நின்றும் வந்திருக்கின்றார்.

இராஜதந்திரிகள் வடபகுதிக்கு விஜயம் செய்வதும் புதிதல்ல. வழமை யானதுதான். ஆனால், சீனத் தூதுவரின் விஜயமும், அவர் வட பகுதியில் அவர் மேற்கொண்ட செயற்பாடுகளும், அவர் தெரிவித்த கருத்துக்களும் பிராந்திய அரசியலில் வட பகுதியை மையப்படுத் திய ஒரு வியூகத்தை சீனா அமைக்கின் றது என்பதைத் தெளிவாகக்காட்டு கின்றது. அத்துடன், வடபகுதியில் இந்தியாவுக்குச் சவால்விடும் வகையில் அவரது செயற்பாடுகள் அமைந்திருப்ப தையும் காணக்கூடியதாக இருந்தது. வடக்கில் இந்தியா மட்டும்தான் முத லீடுகளைச் செய்ய முடியும் என்ற வகை யில் காணப்படும் நிலைப்பாட்டுக்கு சவால்விடுவதாக அவரது இந்த விஜயம் அமைந்திருந்தது.

சீனத் தூதுவரின் வடபகுதி விஜயம் இடம்பெற்ற சந்தர்ப்பம் முக்கியமானது. இலங்கைக்கும் சீனாவுக்கும் இடை யிலான உறவுகளில் அண்மைக்கலமாக ஒரு இடைவெளி ஏற்பட்டிருப்பது இரக சியமானதல்ல. சேதனப் பசளையுடனான சீனக் கப்பல் கொழும்புத்துறைமுகத்தில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டதுடன், இந்த முரண்பாடுகள் ஆரம்பமாகின. ஆதன் தொடர்ச்சியாக, இலங்கையின் மக்கள் வங்கிக்கு சீன நிறுவனம் தடை விதித்தமை போன்றன இடம்பெற்றன. இதேவேளையில், நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச இந்தியாவுக்கான விஜயம் ஒன் றையும் மேற்கொண்டிருந்தார். இதன் தொடர்ச்சியாக இலங்கை எதிர்கொள் ளும் நிதிப் பிரச்னைக்குத் தீர்வைக் காணக் கூடிய வகையிலான திட்டம் ஒன்றை, இந் தியா தயாரித்திருப்பதாகத் தெரிகின்றது.

### சீனாவின் நிவாரணங்கள்

இவ்வாறான ஒரு பின்னணியில்தான் சீனத் தூதரின் யாழ்ப்பாண விஜயம் இடம்பெற்றது. அவரது இந்த விஜயத் தில் மூன்று நோக்கங்கள் பிரதானமாக இருந்துள்ளன. ஒன்று - வடபகுதி மக் களுடனான உறவுகளை வலுப்படுத் திக்கொள்வது. நம்பிக்கையைப் பெற்றுக்கொள்வது. இரண்டாவது, முதலீடுகளுக்கான வாய்ப்புக்கள் குறித்து ஆராய்வது. மூன்று - வடக்கின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை நேரில் சென்று பார்வைலயிடுவதன் மூலமாக இலங்கை மக்களுக்கும் சர்வ தேசத்துக்கும் ஒரு செய்தியைச் சொல் வது. இந்த மூன்று இலக்குகளையும் தூதுவரும் குழுவினரும் கச்சியதாகச் செய்திருப்பதாகவே தெரிகின்றது.

வடபகுதியில் சீனா முன்னெடுத்த பல்வேறு திட்டங்களும் மக்களுடைய எதிர்ப்பைச் சந்தித்திருந்தது. கடல் அட் டைப் பண்ணையை அமைப்பதற்காக அவர்கள் முன்னெடுத்த திட்டங்கள் கூட தமிழ் ஊடகங்களாலும், தமிழ்த் தேசியக் கட்சிகளாலும் விமர்சிக்கப்பட்டதுடன், சந்தேகத்துடனேயே பார்க்கப்பட்டன. இலங்கை அரசாங்கத்துக்கு ஆதரவாக, ஜெனிவா போன்ற சர்வதேச அரங்கு களில் சீனா குரல்கொடுப்பதும், போர்க் காலத்தில் செய்த உதவிகளும்தான் சீனா குறித்த சந்தேகங்களுக்குக் காரணம். வடபகுதியில் தமது திட்டங்களை நிறை வேற்ற வேண்டுமானால், வடக்கு மக்க ளின் நம்பிக்கையை முதலில் பெறவேண் டும் என்ற உபாயத்துடன்தான் சீனத் தூது வர் இந்த முறை களமிறங்கியிருந்தார்.

வடபகுதியில் அண்மைக்காலத்தில் அதிகளவுக்குப் பாதிக்கப்பட்ட தரப்பாக இருப்பவர்கள் மீனவர்கள். இந்திய மீன வர்களின் ஆக்கிரமிப்பும் அவர்களை வெகுவாகப் பாதித்திருக்கின்றது. இந்தப் பின்னணியில், மீனவர்களுக்கான உதவித்திட்டங்கள் பலவற்றுடன்தான் சீனத்தூதுவர் வடபகுதிக்குச் சென்றி ருந்தார். யாழ்ப்பாணத்திலும், மன்னாரி லும் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்காக பெருமளவு நிவாரணங்கள் வழங்கப்பட் டன. குறிப்பாக, பெறுமதியான மீன்பிடி வலைகள் கொடுக்கப்பட்டன. இதன் மூலமாக மக்களுடைய நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ள முடியும் என சீனா கருதுகின்றது.

இரண்டாவதாக முதலீட்டுக்கான வாய்ப்புக்களை ஆராய்வது சீனத்தூது வரின் முக்கிய நேர்கங்களில் ஒன்றாக இருந்தது. வடபகுதியில் சீனாவின் முத லீடுகள் என்றவுடன் அதனை சந்தேகக் கண்களுடன் பார்க்கும் மன நிலையும், எதிர்ப்பதும் தமிழ் மக்களுடைய வழமை யாக இருக்கின்றது. அதனால்தான் சீன நிறுவனம் ஒன்று தமது கடலட்டைப் பண்ணைகளை அண்மைக்காலம் வரையில் இரகசியமாகவே நடத்தியது. அதனைவிடவும், மேலும் சில முதலீடு களைச் செய்வதற்கும் சீனா திட்டமிட் டுள்ளது. இந்த நிலையில் மக்களின் நாடித்துடிப்பை அறிவது. அவர்களு டைய நம்பிக்கையை வெல்வது. முதலீட் டுக்கான வாய்ப்புக்களை ஆராய்வது என்பது அவரது விஜயத்தின் நோக்கங் களில் ஒன்றாக இருந்துள்ளது.

### 3 தீவுகளில் சீனா

யாழ்ப்பாணத்தில் உள்ள மூன்று தீவுகளில் ஏற்கனவே காற்றாலை, சூரிய சக்தி மின்னுற்பத்தி நிலையம் ஒன்றை அமைப்பதற்கான உடன்படிக்கை ஒன்றை சீனா செய்திருந்தது. அது இடைநிறுத்தப்பட்டிருப்பதாக இரு வாரங்களுக்கு முன்னர் செய்தி வெளி யாகியிருந்த போதிலும், அது தவறான செய்தி என சீனத் தூதுவர் யாழ்ப்பா ணத்தில் தனியார் ஊடக நிறுவனம் ஒன்றின் பிரதானிகளுடனான சந்திப்பின் போது தெரிவித்தார். குறிப்பிட்ட திட் டத்தை தாம் கைவிட்டுவிடவில்லை எனவும் அது முன்னெடுக்கப்படும் என வும் அவர் குறிப்பிட்டார். அதே வேளை யில், யாழ்ப்பாணத்தில் உள்ள மற்றொரு தீவையும் பெறுவதற்கான முயற்சிகளை சீனா மேற்கொண்டிருப்பாக மற்றொரு தகவல் வெளியாகியிருக்கின்றது.

யாழ்ப்பாணத்தின் கரையோரப் பகுதி களையும், மன்னார் கடற்பகுதிகளும் தான் சீனத்தூதுவரின் கவனத்துக்குரிய இடங்களாக இருந்துள்ளதை அவரது மூன்றுநாள் விஜயத்தின் போது அவ தானிக்க முடிந்தது. குறிப்பாக யாழ்ப்பா ணத்தில் பருத்தித்துறை துறைமுகத்துக் குச் சென்ற அவர், அங்கிருந்து இந்தியக் கரை தெரிகின்றதா என தொலைநோக்கி ஊடாகப் பார்த்தார். இங்கிருந்து இந் தியா எவ்வளவு தூதரம் எனவும் கேள்வி எழுப்பினார். அது அவருக்குத் தெரியா ததல்ல. ஆனால், அந்தக் கேள்வியின் ஊடாக அவர் உணர்த்த முனைந்த செய்தி முக்கியமானது.

அதேபோல அரியாலையில் சீன நிறு வனம் ஒன்றினால் மேற்கொள்ளப்படும் கடலட்டைப் பண்ணைக்கும் அவர் சென் றார். யாழ்ப்பாண மக்களுக்கு வேலை வாய்ப்பு, வாழ்வாதாரம் என்பவற்று டன், நாட்டுக்கு அந்நியச் செல வாணி வருமானமும் இதன்மூலம் பெருமளவுக் குக் கிடைக்கின்றது என்பது அங்கு தெரி விக்கப்பட்டது. இங்கு உற்பத்தியாகும் கடலட்டைகள் முழுமையாக சீனா வுக்கே ஏற்றுமதி செய்யப்படு கின்றன என்பது முக்கியமானது. கடலட்டைப் பண்ணைகளை வடக்கில் பல இடங்களுக் கும் விஸ்தரிப்பதுதான் சீனாவின் நோக்கம்.

### இராமர் பாலம்

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் உள்ள சரித்திரப் புகழ் பெற்ற இராமர் பாலத்தை எதற்காக சீனத்தூது வர் நேரில் சென்று பார்வையிட்டார் என்பதுதான் புதிராக உள்ளது. சுமார் ஒரு மணி நேரம் கடலில் பயணித்து இந்திய எல்லை வரை சென்ற அவர், குறிப்பிட்ட மணல் திட்டில் இறங்கி அரை மணி நேரம் அங்கிருந்துள்ளார். இதன் மூலமாக இந்தியாவுக்கு அவர் சொல்ல முற்பட்ட செய்தி என்ன? இந்தியாவை சீண்டிப் பார்க்கும் ஒரு நகர்வாகவே இது கருதப்படுகின்றது.

இராமர் பாலத்தை பார்வையிட்ட பின்னர் தலைமன்னார் திரும்பிய அவர், “இது முடிவு மட்டுமல்ல. ஆரம்பமும் கூட” என்று தெரிவித்ததன் அர்த்தம் என்ன? சீனத் தூதுவரின் இந்த வடக்கு விஜ யம் புதுடில்லியை நன்கு குழப்பி யிருக்கும். இந்தியாவின் பிரதிபலிப்பு எவ்வாறாகவுள்ளது என்பதை சில தினங் களில் பார்க்கக்டியதாக இருக்கலாம்.

### சீனாவுக்கான சவால்கள்

ஏனைய நாடுகளின் தூதுவர்கள் வட பகுதிக்கு வருவதற்கும் சீனத் தூதுவரின் வருகைக்கும் இடையில் முக்கியமான முரண்பாடு ஒன்றுள்ளது. மேற்கு நாடு களின் தூதுவர்கள் எப்போதும் தமிழ் மக்களுடைய அபிலாசைகள், மனித உரிமை விவகாரங்கள் குறித்து அக்கறை வெளியிடுபவர்களாக இருந்துள்ளார்கள். ஆதற்காக கொழும்புக்கு அழுத்தம் கொடுத்துள்ளார்கள். சர்வதேச அரங்கு களில் அதற்காக குரல் கொடுத்துள் ளார்கள். ஆனால், சீனா ஒருபோதும் தமிழர்களுடைய அரசியல் பிரச்னைகள் குறித்தோ மனித உரிமைகள் குறித்தோ அக்கறை வெளியிட்ட ஒரு நாடல்ல.

இந்தப் பிரச்னைகள் அனைத்தும் உள்நாட்டுப் பிரச்னை, இவற்றுக்கான தீர்வை நீங்களே தேடிகொள்ள வேண் டும் என்பது அவர்களது நிலைப்பாடு. மற்றைய நாடுகளின் உள்விவகாரங்களில் தாம் தலையிடுவதில்லை. அதுதான் எமது நிலைப்பாடு என யாழ்ப்பாணத் தில் இடம்பெற்ற சந்திப்பு ஒன்றில் தூதுவர் தெரிவித்திருக்கின்றார். தமது பிரச்சினை குறித்து அக்கறைப்பாட ஒரு நாட்டின் செயற்பாடுகள் குறித்து தமிழ் மக்கள் நம்பிக்கை கொள்வார்கள் என்பது எதிர்பார்க்கக்கூடிய ஒன்றல்ல.

சீனத் தூதுவர் தனது வடபகுதி விஜ யத்தின்போது மக்கள் பிரதிநிதிக ளையோ, பொது அமைப்புக்களையோ சந்திக்கவில்லை. ஆவ்வாறான சந்திப்பை அவர்கள் தவிர்த்தமைக்கான காரணம் புரிந்துகொள்ளக்கூடியதுதான். இந்த நிலையில் எவ்வளவு முதலீடுகளைப் போட்டு திட்டங்களை நடைமுறைப் படுத்தினாலும் அவர்களால் மக்களை வெல்ல முடியுமா?

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள்

நேரம் : 1 மணித்தியாலம்

கல்வி tv CHANNEL

2. (i) அஃறிணைப் பன்மை நிகழ்கால வினைச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
   (1) பாடின (2) உண்கின்றனர் (3) கூவுகின்றன.

   (ii) உயர்திணைப் படர்க்கைப் பன்மைப் பெயர்ச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
   (1) பெற்றோர் (2) நாங்கள் (3) அவை

3. பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தை எழுதுக.
   (i) வாகை சூடுதல் : ..........................................
   (ii) நட்டாற்றில் விடல் : ..........................................

4. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.
   (i) அங்குள்ள சிற்பங்களைத் தொடவேண்டாம் என்று காவலாளி கூறினான்
   (ii) திங்கள் புதன் வெள்ளி ஆகிய நாட்களில் மாலை நேர வகுப்புக்கள் நடைபெறும்

5. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.
   நகரங்களுள் / ஒன்றாகும் / இலங்கையின் / அநுராதபுரமும் / பழைமையான
   ..........................................
   ..........................................

6. வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
   (i) மரத்திலிருந்து மாங்காய்கள் .................... (விழுந்தது / விழுந்தன)
   (ii) மண்டபம், பல வண்ணக் கொடிகளால் .................... (அலங்கரிக்கப்பட்டிருந்தது / அலங்கரிக்கப்பட்டிருந்தன)
   (iii) ஒவ்வொரு மலரும் .................... (அழகானது / அழகானவை)

7. பின்வரும் தொடர் குறிக்கும் தனிச் சொல்லை எழுதுக.
   ஒரே பாடசாலையில் ஒன்றாகப் படித்தவன் : ..........................................

8. சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
   (i) ஆராட்ச்சி / ஆராய்ச்சி
   (ii) பன்னிரண்டு / பன்னிரெண்டு

9. பின்வரும் வினாக்களுக்கு உரிய விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.
   (i) தமிழில் உள்ள உயிர் எழுத்துக்களில் எத்தனை குறில் எழுத்துக்கள் உள்ளன? : ..........................
   (ii) தமிழில் உள்ள மொத்த எழுத்துக்கள் எத்தனை? : ..........................

10. பின்வரும் பிராணியின் ஆணுக்குரிய மரபுப் பெயரை எழுதுக.
   சிங்கம் : ..........................

11. பின்வரும் ஆங்கிலச் சொற்கள் ஒவ்வொன்றிலும் ஓர் எழுத்து விடுபட்டுள்ளது. அவ்வெழுத்தை வெற்றிடத்தில் எழுதுக.
   (i) Vill ........ ge (ii) Te ........ cher

### விடைகள்

2. (i) (3) கூவுகின்றன
   (ii) (1) பெற்றோர்
3. (i) வெற்றி அடைதல்
   (ii) ஆபத்தில் கைவிடல்
4. (i) "அங்குள்ள சிற்பங்களைத் தொடவேண்டாம்" என்று காவலாளி கூறினான்.
   (ii) திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் மாலை நேர வகுப்புக்கள் நடைபெறும்.
5. இலங்கையின் பழைமையான நகரங்களுள் அநுராதபுரமும் ஒன்றாகும்.
6. (i) விழுந்தன
   (ii) அலங்கரிக்கப்பட்டிருந்தது
   (ii) அழகானது
7. சகபாடி
8. (i) ஆராய்ச்சி
   (ii) பன்னிரண்டு
9. (i) ஐந்து / 5
   (ii) இருநூற்று நாற்பத்தேழு / 247
10. ஏறு
11. (i) a
   (ii) a

# சர்வதேச நாணய நிதியத்தை நாடினால் அரசிலிருந்து உடன் வெளியேறுவேன்!

## அமைச்சர் வாசுதேவ எச்சரிக்கை



கொழும்பு, டிசெ. 21

"இலங்கை அரசு, சர்வதேச நாணய நிதியத்தை நாடும் பட்சத்தில் மறுநொடியே அரசியிலிருந்து உடனே வெளியேறுவேன். சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெறுவதென்பது ஏழு பரம்பரைகளுக்குப் பாதகமாகவே அமையும்."

- இவ்வாறு ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"ஒரு நாடால் ஒன்றுமே செய்யகொள்ள முடியாத பட்சத்தில், இறுதியாக நாடப்படும் இடம்தான் சர்வதேச நாணய நிதியம். நெருக்கடியான நிலையில்தான் அந்த நாடு சர்வதேச நாணய நிதியத்தை நாடும். இதன்போது இடம் பெறும் கொடுக்கல், வாங்கலானது சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கையின் பிரகாரமே இடம்பெறும். கடுமையான நிபந்தனைகளும் அதில் உள்ளடங்கும்.

குறிப்பாக அரச சொத்துக்களைத் தனியார் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் கொள்வனவு செய்வதற்கு இடமளித்தல், நாட்டில் நலன்புரி விடயங்களுக்காக ஒதுக்கப்படும் நிதியை படிப்படியாக குறைத்தல், ரூபாயின் பெறுமதியைச் சுதந்திரமாகத் தீர்மானிக்க விடுதல் எனப் பல நிபந்த னைகள் உள்ளன. இவற்றை ஏற்றால் அவை நாட்டுக்கு பாதக விளைவுகளையே தரும்.

அப்படியானால் மாற்றுவழி என்னவென்று சிலர் கேட்கலாம், எமது நட்பு நாடுகளுடன் டொலர் பிரச்னையை தீர்த்துக்கொள்ளத் தற்காலிக உடன்படிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். எமது அரசு சர்வதேச நாணய நிதியத்தை நாடும் தீர் மானத்தை எடுத்தால் அரசில் இருக்கமாட்டேன்"

- என்றார். (இ)



### தமிழ் மாணவி சாதனை

கொழும்பு, டிசெ. 21

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் எம்.பி.பி.எஸ். இறுதிப் பரீட்சையில் முதல் தரத்தில் தேர்ச்சி பெற்ற அக்கரைப்பற்றைச் சேர்ந்த தணிகாசலம் தர்ஷிகா என்ற மாணவி 13 தங்கப் பதக்கங்களைப் பெற்றுப் பெரும் சாதனை படைத்துள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் பட்டமளிப்பு விழாவின்போது வழங்கப்படும் 37 தங்கப் பதக்கங்களில் சிறந்த மருத்துவ பீட மாணவ விருது உட்பட 13 தங்கப்பதக்கங்களை இவர் தனதாக்கிக் கொண்டுள்ளார்.

அத்தோடு குறித்த பட்டப்படிப்பு ஆண்டுக்குரிய முதல் நிலையாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று, ஆலையடி வேம்பு பிரதேச செயலகத்துக்குட்பட்ட அக்கரைப்பற்று 7/3 ஐச் சேர்ந்த ஓய்வுநிலை அதிபர் தணிகாசலம் மற்றும் குமுதா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வியான தர்ஷிகா இந்தப் பெரும் சாதனையைப் புரிந்து பெற்றோருக்கும் சொந்த மண்ணுக்கும் பெருமை தேடிக் கொடுத்துள்ளார். (இ)

# தீர்வு கிட்டும்வரை நான் ஓயமாட்டேன்



## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் திட்டவட்டம்

கொழும்பு, டிசெ. 20

**"தேசிய இனப்பிரச்னைக்குத் தீர்வு கண்டால் மட்டுமே இந்நாட்டுக்கு எதிர்காலம் உண்டு. இன ஐக்கியம் இல்லாவிட்டால் ஒரு போதும் நாட்டை அபிவிருத்தி நோக்கி அழைத்துச்செல்ல முடியாது.**

கொழும்பு, டிசெ. 21

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு கிடைக்கப்பெறும் வரை நான் ஓய்வுபெறப்போவதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் அறிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இரா. சம்பந்தன் எம். பி. துறக்கவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு அறிவிப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"நான் வசதிகளை அனுபவிப்பதற்காக அரசியலுக்கு வந்தவன் அல்லன். தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்னைக்கு முடிவு காணக்கூடிய அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்காகவே அரசியலுக்கு வந்தவன் நான்.

எனவே எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதை பெறாமல் அரசியலில் இருந்து நான் விடைபெறப் போவதில்லை.

இலங்கை அரசு தமிழ் மக்களுக்கான ஓர் அரசியல் தீர்வை முன்வைக்கவேண்டும் என்ற கோரிக்கையை நாம் நீண்டநாட்களாக முன்வைத்த போதும், அந்த கோரிக்கை கவனத்தில் கொள்ளப்படாது இழுத்தடிக்கப்பட்டு காலம் கடத்துகின்ற போக்கு காணப்படுகின்ற நிலையில் தமிழ் மக்களின் எதிர்கால சுபீட்சமும் அமைதியும் சுயநிர்ணயமும் உள்ளடக்கிய தீர்வைப்பெறும் வரை அரசியலில் இருந்து ஓய்வுபெறும் எண்ணம் எனக்கு எப்போதும் இருந்ததில்லை.

தந்தை செல்வா என்னை அரசியலுக்கு வரும்படி அழைத்தபோது நான் மூன்று முறை மறுத்ததன் பின்பே அரசியலுக்குள் வந்தேன். நான் அரசியலுக்கு வந்ததன் காரணம் தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்னைக்கு, நிரந்தரமான, நிச்சயமான தீர்வைப்பெற வேண்டும் என்பதற்காகவே யாகும். அதற்காக கடந்த 50 வருடங்களாக நான் போராடி வந்திருக்கின்றேன்.

என்னுடைய வருகை வெறும் அரசியல் மயப்பட்டதாக, அனுகூலங்களை அனுபவிக்க வேண்டும் என்பதற்காக அமைந்த ஒரு பயணம் அல்ல"

- என்றார். (இ)

### யானை தாக்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 21

யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அநுராதபுரம், ஹெப்பிட்டி கொல்லாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வடுவாகம வயல் பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை, பவர்ஹவுஸ் வீதியைச் சேர்ந்த 33 வயது நபரே இவ்வாறு மரணமடைந்தார்.

பிரேத பரிசோதனைக்காக ஹெப்பிட்டி கொல்லாவ வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது. (இ)

# போதைப்பொருட்களுடன் 12 இளைஞர்கள் சிக்கினர்

## சிவனொளிபாதமலைக்கு யாத்திரை சென்றவேளை

ஹட்டன், டிசெ. 21

போதைப்பொருட்களுடன் சிவனொளிபாதமலைக்கு யாத்திரை சென்ற 12 இளைஞர்கள் ஹற்றன் குற்ற விசாரணைப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருட்களுடன் யாத்திரைக்குச் செல்வோரைக் கைதுசெய்வதற்காக, ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியின் பல இடங்களில் திடீர் சோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதன்போதே குறித்த 12 இளைஞர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஹற்றன் பொலிஸ் மோப்ப நாயான ஸ்டுவட்டின் ஒத்துழைப்புடன் அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து 10 மில்லிகிராம் ஹெரோயின், கேரள கஞ்சா என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதானவர்கள் 20 - 30 வயதுக்குட்பட்டவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அநுராதபுரம், ராகமை, கொழும்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். (இ)

# பச்சிளம் குழந்தையை விற்று ஹெரோயின் வாங்கிய தம்பதி

## குருநாகலில் கொடூரம்

மூன்று மாதங்களேயான பச்சிளம் கைக்குழந்தையை 7 இலட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்து, அந்நிதியைப் பயன்படுத்தி போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டனர் எனக் கூறப்படும் தம்பதியினர் குரு நாகல் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என சிங்கள நாளிதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது. குருநாகலிலுள்ள சட்டத்தரணி ஒருவரிடம் கடிதமொன்றை பெற்றுக்கொண்டு, அநுராதபுரத்தில் உள்ள தம்பதியினருக்கே குழந்தை இவ்வாறு விற்கப்பட்டுள்ளது. ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட 28 வயதான பெண்ணின் பையில் சிறிய குழந்தையொன்றின் ஆடை இருந்துள்ளது. அதனைத் தொடர்க்கு முன்னெடுக்கப் பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே குழந்தை விற்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது. குழந்தையை விற்கு பெற்ற பணத்தில் 30 ஆயிரம் ரூபாவுக்கு ஹெரோயின் வாங்கி விற்பனையில் ஈடுபட்டுள்ளனர். (இ)

# சிலியின் இளைய ஜனாதிபதியாக கேப்ரியல் போரிக் தேர்வாகினார்

சண்டியாகோ, டிசெ. 21

சிலியில் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களின்போது முக்கியத்துவம் பெற்ற இடதுசாரி சட்டமன்ற உறுப்பினர் கேப்ரியல் போரிக், நாட்டின் அடுத்த ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

கிட்டத்தட்ட 99 சதவீத வாக்குச் சாவடிகளில், கேப்ரியல் போரிக் 56 சதவீத வாக்குகளைப் பெற்றார். அவரது பழமைவாத எதிராளியான ஜோஸ் அன்டோனியோ காஸ்டுக்கு 44 சதவீத வாக்குகள் கிடைத்தன.

35 வயதில், போரிக் சிலியின் ஜனாதிபதியாக பதவியேற்க உள்ளார். அவர் மார்ச் மாதம் பதவியேற்பார்.

வெளியேறும் ஜனாதிபதி செபாஸ்டியன் பினேரா, ஒரு பழமைவாத கோடீஸ்வரர். மூன்று மாத மாற்றத்தின் போது தனது அரசாங்கத்தின் முழு ஆதரவை வழங்குவதற்காக போரிக்குடன் காணொளி வாயிலாக மாநாட்டை நடத்தினார்.

சிலியின் தெற்கில் உள்ள புண்டா அரினாஸைப் பூர்வீகமாகக் கொண்ட போரிக், ஒரு மாணவராக சண்டியாகோவில் உள்ள சிலி பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் கூட்டமைப்பை வழிநடத்தினார். அவர் 2011இல் மேம்படுத்தப்பட்ட மற்றும் மலிவான கல்வியைக் கோரி போராட்டங்களை முன்னெடுத்தார்.

2014 இல் அவர் தேசிய காங்கிரஸில் கீழ்சபை சட்டமன்ற உறுப்பினராக சேர்ந்தார். சிலியின் பரந்த மற்றும் குறைந்த மக்கள்தொகை கொண்ட தெற்குப் பகுதியான மாகலன்ஸை பிரதிநிதித்துவப்படுத்தினார். (அ)

# ஹொங்கொங் சட்டசபைத் தேர்தல்: பீஜிங் சார்பு வேட்பாளர்கள் வெற்றி!



ஹொங்கொங்கின் சர்ச்சைக்குரிய சட்ட மேலவை தேர்தலில், பீஜிங் சார்பு வேட்பாளர்கள் அமோக வெற்றியைப் பெற்றுள்ளனர்.

இந்த வேட்பாளர்களில் சிலர் மத்திய வாக்கு எண்ணும் மையத்தில் மேடையில் ஆரவாரம் செய்து வெற்றி உறுதி என்று கோஷமிட்டனர்.

மேலும், கிட்டத்தட்ட அனைத்து இடங்களும் பீஜிங் சார்பு மற்றும் ஸ்தாபன சார்பு வேட்பாளர் களால் கைப்பற்றப்பட்டுள்ளன. ஹொங்கொங்கின் தேர்தல் முறையில் சீனா மிகப் பெரிய மாற்றங்களைச் செய்த பிறகு நடைபெறும் முதல் தேர்தல் இதுவாகும்.

அதிகாரிகளின் கூற்றுப்படி, 30.2 சதவீத வாக்காளர்கள் மட்டுமே வாக்கெடுப்பில் பங்கேற்றனர். 2016ஆம் ஆண்டு சட்டமன்ற வாக்கெடுப்புடன் ஒப்பிடும் போது இது கிட்டத்தட்ட பாதியாகும்.

2000ஆம் ஆண்டில், ஆங்கிலேயரிடம் இருந்து சீன ஆட்சிக்கு ஹொங்கொங் திரும்பிய பிறகு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் முந்தைய சாதனை 43.6 சதவீதமாக இருந்தது.

குறைந்த வாக்குப்பதிவு புதிய சட்டமன்றத்தின் சட்டபூர்வமான தன்மையை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் என்று சில பார்வையாளர்கள் கூறினாலும், ஹொங்கொங் தலைவர் கேரி லாம் ஒரு அறிக்கையில், 1.3 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட வாக்குகள் பதிவானது மேம்படுத்தப்பட்ட தேர்தல் முறைக்கான ஆதரவு' என்று கூறினார்.

தேசபக்தர்கள் மட்டுமே தேர்தலில் போட்டியிட முடியும் வகையில் தேர்தல் நடைமுறை மாற்றப்பட்டிருப்பதாக அரசாங்கம் முன்னர் கூறியிருந்தது. ஆனால், இது நாட்டின் ஜனநாயகக் குரல்களை முடக்கும் செயல் என விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

லெக்கோ, ஹொங்கொங்கின் மினி- பாராளுமன்றம், நகரத்தில் சட்டங்களை உருவாக்கி திருத்தும் சக்தி வாய்ந்த அமைப்பாகும். 90 சட்டமன்றத் தொகுதிகளில் 20 மட்டுமே பொதுமக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன.

தேர்தல் குலுக்கலின் கீழ், நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களின் வீதம் பாதியில் இருந்து கால் பங்கிற்கும் குறைவாக அல்லது 20 இடங்களுக்குக் குறைக்கப்பட்டது.

பீஜிங் விசுவாசிகளைக் கொண்ட குழுவால் நாற்பது இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. மீதமுள்ள 30 இடங்கள் செயற்பாட்டுத் தொகுதிகள் எனப்படும் நிதி மற்றும் பொறியியல் போன்ற தொழில்முறை மற்றும் வணிகத் துறைகளால் நிரப்பப்பட்டன. (அ)

# மியன்மாரில் இராணுவத்தின் படுகொலைகள் அம்பலம்!

## காணொலி புகைப்படங்களை வெளியிட்டது பி.பி.சி








மியன்மாரில் மக்களாட்சியைக் கவிழ்த்து இராணுவம் ஆட்சியை கைப்பற்றிய பின்னர் அங்கு மிக மோசமான சித்திரவதைகள் மற்றும் படுகொலைகள் உள்ளிட்ட மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளமை ஆதாரங்களுடன் அம்பலத்துக்கு வந்துள்ளது.

இராணுவம் ஆட்சியை கைப்பற்றிய பின்னர் குறைந்தது 40 பேர் சித்திரவதை செய்து கொல்லப்பட்டதாக அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நேரில் பார்த்தவர்கள் மற்றும் உயிர் பிழைத்தவர்களின் சாட்சியங்களின் அடிப்படையில் இராணுவத்தின் சுற்றிவளைப்புக்களின்போது 17 வயதுக்குட்பட்ட சிலர் உள்ளிட்ட ஆண்கள் தனிமைப்படுத்தப்பட்டு இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

அவர்கள் சித்திரவதை செய்யப்பட்டு ஆழமற்ற குழிகளில் போட்டு புதைக்கப்பட்ட கொடூரங்கள் தொடர்பான சில காணொலி மற்றும் புகைப்படக் காட்சிகளை பி.பி.சி வெளியிட்டுள்ளது.

மத்திய மியன்மாரில் உள்ள சகாயிங் மாவட்டத்தில் எதிர்க்கட்சிகள் கோட்டையான கானி என்ற பகுதியில் கடந்த ஜூலை மாதம் நான்கு வெவ்வேறு சம்பவங்களின்போது பல கொலைகள் நடந்துள்ளன.

ஆட்சிக் கவிழ்ப்பின் மூலம் கடந்த பெப்ரவரி மாதம் ஆங் சான் சூகி தலைமையிலான ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை அகற்றியது முதல் பொதுமக்களிடமிருந்து கடும் எதிர்ப்பை மியன்மார் இராணுவம் எதிர்கொண்டது.

இந்நிலையில் இராணுவம் ஆட்சியை கைப்பற்றிய பின்னர் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் படுகொலைகள் குறித்து கானியில் வசிக்கும் 11 பேரிடம் பேசிய ஆதாரங்கள், நேரில் கண்ட சாட்சிகள் மற்றும் நாட்டில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை நடத்தும் அரச சார்பற்ற அமைப்புகளின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மியான்மர் இராணுவத்தின் படுகொலைகள் குறித்த தகவல்களை பி.பி.சி வெளிப்படுத்தியுள்ளது.

யின் கிராமத்திலும் பல படுகொலைகள் இடம்பெற்றுள்ளன. அங்கு குறைந்தது 14 ஆண்கள் சித்திரவதை செய்யப்பட்டனர் அல்லது அடித்துக் கொல்லப்பட்டனர். அவர்களின் உடல்கள் காடுகளுக்குள் வீசப்பட்டன.

படுகொலை செய்யப்படுவதற்கு முன்னர் ஆண்கள் கயிற்றால் இறுக்கிக் கட்டப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர் என பகுதியில் உள்ள சாட்சிகள் தெரிவித்துள்ளனர். அச்சுறுத்தல் காரணமாக சாட்சிகளின் பெயரை வெளியிடவில்லை என பி.பி.சி. தெரிவித்துள்ளது.

இராணுவத்தின் கொடூரங்களை எதிர்த்து எங்களால் எதுவும் செய்ய முடியவில்லை. அழ மட்டுமே எங்களால் முடிந்தது என பெண் ஒருவர் தெரிவித்துள்ளார். அவரது சகோதரர், மருமகன் மற்றும் மைத்துனர் இராணுவத்தினரால் கொல்லப்பட்டனர்.

அவர்களைக் கொல்ல வேண்டாம் என நாங்கள் இராணுவத்தினரிடம் கெஞ்சினோம். அவர்கள் அதைப் பொருட்படுத்தவில்லை. பிடித்து வைத்துள்ளவர்களில் உங்கள் கணவர்கள் இருக்கிறார்களா? அவ்வாறு இருந்தால் அவர்களின் இறுதிச் சடங்குகளுக்கான ஏற்பாடுகளை செய்யுங்கள் என இராணுவம் தங்களிடம் தெரிவித்தது என பெண்கள் சிலர் பி.பி.சியிடம் தெரிவித்துள்ளனர்.

இராணுவத்தால் கைது செய்யப்பட்ட பலர் கொல்லப்படுவதற்கு முன்னர் மோசமாகச் சித்திரவதை செய்யப்பட்டதாக இராணுவத்தின் பிடியில் இருந்து தப்பிய ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இராணுவத்திடம் சிக்கிய சிலர் மிக இளம் வயதினராக இருந்தார்கள். சிலருக்கு 17 அல்லது 18 வயது இருக்கலாம். சித்திரவதை செய்யப்பட்டவர்களில் பெண் ஒருவரும் இருந்தார்.

யின் கிராமத்துக்கு அருகில் உள்ள ஜீ பின் ட்வின் கிராமத்தில் ஜூலை மாத இறுதியில் ஒரு ஒரு குழந்தை மற்றும் ஊனமுற்ற நபரின் உடல்கள் உட்பட 12 பேரின் சிதைந்த உடல்கள் ஆழமற்ற கிடங்குகளில் கண்டுபிடிக்கப்பட்டன. 60 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலம் அருகில் உள்ள மரமொன்றில் கட்டப்பட்டு கிடந்தது. அவரது உடலத்தில் சித்திரவதை செய்யப்பட்டமைக்கான தெளிவான அறிகுறிகள் காணப்பட்டன. இராணுவம் கிராமத்திற்குள் நுழைந்தபோது கொல்லப்பட்டவரின் மகனும் பேரனும் தப்பி ஓடிவிட்டனர். வயதானவர் என்பதால் இராணுவத்தினர் தன்னை எதுவும் செய்ய மாட்டார்கள் என நம்பி அவர் வீட்டில் தங்கியிருந்தபோதே கொல்லப்பட்டார் என குடும்பத்தினர் தெரிவித்தனர்.

இராணுவத்தை எதிர்த்தவர்கள் குறி வைக்கப்பட்டனர். குறிப்பாக ஆண்கள் இராணுவத்தினரின் இலக்காக இருந்ததாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆட்சிக்கவிழ்ப்புக்குப் பின்னர் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் மியன்மாரில் இருந்து இயங்க தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், அரசு சார்பற்ற பெரும்பாலான ஊடகங்கள் செயற்படமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் உள்நாட்டில் இருந்து உண்மைகளை வெளிக்கொணர்வது சாத்தியமற்றதாகியுள்ளது. (அ)

# கோவிட் தொற்றை எதிர்கொள்ள பிரிட்டனிடம் 220 மில்லியன் பவுண்ஸ் பெறும் ஸ்கொட்லாந்து!

எடின்பேர்க், டிசெ. 21

கொரோனா வைரஸ் தொற்றை எதிர்கொள்ள பிரிட்டன் அரசாங்கத்திடம் இருந்து, ஸ்கொட்லாந்து மேலும் 220 மில்லியன் பவுண்ஸ்களைப் பெற உள்ளது.

ஒமைக்ரோன் தொற்று எண்ணிக்கை அதிகரித்து வருவதால், திறைசேரியில் இருந்து அதிக பணம் பெற ஸ்கொட்லாந்து அரசாங்கம் மீண்டும் மீண்டும் அழைப்பு விடுத்துள்ளது.

பகிர்ந்தளிக்கப்பட்ட நாடுகளுக்கும் பிரிட்டன் அரசாங்கத்துக்கும் இடையிலான விவாதங்களைத் தொடர்ந்து கூடுதல் நிதியுதவி வழங்கப்படுகிறது.

முதலமைச்சர் நிக்கோலா ஸ்டர்ஜன், இந்த அறிவிப்பை வரவேற்றார்.



## எல். பி. எல். இருபது - 20 போட்டி:

# மெண்டிஸ் 85, துஷார 5 விக்கெட் இறுதிக்குள் நுழைந்தது காலி!

அம்பாந்தோட்டை, டிசெ. 21

குஷல் மெண்டிஸின் அதிரடி அரைச்சதமும், துஷாரவின் அபாரமான பந்துவீச்சும் கைகொடுக்க யாழ்ப்பாணம் அணியை இலகுவாக வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது காலி கிளாடியேற்றர்ஸ் அணி.

எல். பி. எல். இருபது - 20 தொடரில் இறுதிப் போட்டிக்கு தகுதி பெறுவதற்கான இரண்டாவது போட்டி நேற்றுமுன்தினம் இரவு அம்பாந்தோட்டை சூரிய வெவ மைதானத்தில் நடந்தது.

இந்தப் போட்டியில் திஸர பெரேரா தலைமையிலான யாழ்ப்பாணம் கிங்ஸ், பானுக ராஜபக்ஷ தலைமையிலான காலி கிளாடியேற்றர்ஸ் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற யாழ்ப்பாணம் அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இதனால், காலி அணி துடுப்பெடுத்தாடியது. குசல் மெண்டிஸ் மற்றும் தனுஷ்க குணதிலக இணை தொடக்கம் கொடுத்தனர். சிறப்பான ஆரம்பத்தை ஏற்படுத்திய இந்த இணை பவர்பிளே முடிவில் 61 ஓட்டங்களை விக்கெட் இழப்பின்றி பெற்றது.

எனினும், 11ஆவது ஓவர் நிறைவில் முதல் விக்கெட் இணைப்பாட்டம் 100 ஓட்டங்களை கடந்தது. இருவரும் மொத்தமாக 78 பந்துகளில் 121 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றனர். எல்.பி.எல். போட்டி வரலாற்றில் அதிக ஓட்டங்களை பெற்ற இணைப்பாட்டமாக இது பதிவானது.




குணதிலக 34 பந்துகளில் அரைச் சதம் கடந்தார். குஷல் மெண்டிஸ் 3 பந்துகளில் அரைச் சதத்தை கடந்தார். 13.2 ஓவர்களில் காலி அணியின் முதல் விக்கெட் வீழ்த்தப்பட்டது. 42 பந்துகளில் ஒரு சிக்ஸர், 6 பௌண்ட்ரிகளுடன் 55 ஓட்டங்களைப் பெற்றிருந்த குணதிலக ஆட்டமிழந்தார்.

ஆனால், மறுபுறத்தில் குஷல் யாழ்ப்பாண அணியின் வீரர்களின் பந்துவீச்சாளர்களின் நாலா திசையிலும் பறக்க விட்டார். அவர் 53 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 7 பௌண்ட்ரிகளை பறக்கவிட்டு 85 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

20 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 188 ஓட்டங்களை காலி அணி குவித்தது.

189 ஓட்டங்கள் என்ற கடின இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் அணிக்கு துஷாரவின் பந்துவீச்சு சிம்மசொப்பனமானது. இதனால், அந்த அணியினர் வேகமாக விக்கெட்களைப் பறிகொடுத்தனர். இதனால், 16.5 ஓவர்களுக்கு அந்த அணி சகல விக்கெட்களையும் இழந்து 124 ஓட்டங்களைப் பெற்று 64 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

ரமானுல்லா குர்பாஸ் மற்றும் வனிந்து ஹசரங்க ஆகியோர் மட்டுமே 10 ஓட்டங்களைக் கடந்தனர். 37 பந்துகளை எதிர்கொண்ட குர்பாஸ் 3 சிக்ஸர்கள் மற்றும் 4 பௌண்ட்ரிகளுடன் 59 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் துஷாரவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். வனிந்து ஹசரங்கவும் 15 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 3 பௌண்ட்ரிகள் அடங்கலாக 29 ஓட்டங்களுடன் துஷாரவின் பந்து வீச்சில் பிடிகொடுத்து வெளியேறினார்.

காலி அணியின் பந்துவீச்சில் துஷார 5 விக்கெட்களையும், புலின தரங்க, மெஹமட் அமீர் மற்றும் மொஹமட் ஹப்பீஸ் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இந்த வெற்றியின் மூலம் காலி அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. இது யாழ்ப்பாணம் அணிக்கு மூன்றாவது தொடர் தோல்வியாக அமைந்தது.

(ஐ)

# பாகிஸ்தான் செல்கிறது நியூசிலாந்து

வெலிங்டன், டிசெ. 21

அடுத்த இரு வருடங்களில் பாகிஸ்தானுக்கு இரு முறை சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளதாக நியூசிலாந்து கிரிக்கெட் அறிவித்துள்ளது.

பாகிஸ்தானில் 3 ஒருநாள், 5 இருபது 20 போட்டிகளை விளையாடத் திட்டமிட்டுக் கடந்த செப்ரெம்பர் மாதம் பாகிஸ்தானுக்கு வந்தது நியூசிலாந்து அணி.

18 வருடங்களுக்குப் பிறகு பாகிஸ்தானுக்கு நியூசிலாந்து சுற்றுப்பயணம் செய்தபோதிலும், பாதுகாப்பு காரணங்களால் நியூசிலாந்து தொடரை நிறுத்தியது.



இந்நிலையில் அடுத்த இரு வருடங்களில் பாகிஸ்தானுக்கு இருமுறை சுற்றுப்பயணம் மேற்கொள்கிறது நியூசிலாந்து அணி. 2022-23இல் டிசெம்பர், ஜனவரி மாதங்களில் பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் செய்து இரு டெஸ்ட்கள், 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது. இதன்பிறகுக் கடந்த செப்ரெம்பர் மாதம் ஒத்திவைக்கப்பட்ட ஒருநாள், இருபது - 20 தொடர்களை 2023 ஏப்ரலில் விளையாடவுள்ளது. அப்போது 5 ஒருநாள், 5 இருபது 20 போட்டிகளில் இரு அணிகளும் விளையாடவுள்ளன என்று நியூசிலாந்து கிரிக்கெட் அறிவித்துள்ளது.

மார்ச் 2022 முதல் ஏப்ரல் 2023 வரை பாகிஸ்தானில் 8 டெஸ்ட்கள், 11 ஒருநாள், 13 இருபது 20 போட்டிகள் நடைபெறவுள்ளன. அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, நியூசிலாந்து ஆகிய அணிகள் இந்தத் தொடர்களில் பங்கேற்கின்றன. (ஐ)



# ஆஷஷ் இரண்டாவது போட்டி; அவுஸ்திரேலியா அபார வெற்றி!

அடிலெய்ட், டிசெ. 21

ஆஷஷ் தொடரின் இரண்டாவது போட்டியையும் அவுஸ்திரேலிய அணி 275 ஓட்டங்களால் வெற்றி கொண்டது. இதனால், 2 - 0 என்ற கணக்கில் 5 போட்டிகள் கொண்ட தொடரில் முன்னிலை பெற்றது.

அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகள் மோதிய இரண்டாவது போட்டி அடிலெய்டில் நடந்தது. பகல் - இரவு போட்டியாக நடந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

150.4 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 473 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் முதல் இனிங்ஸ் ஆட்டத்தை இடைநிறுத்தியது. இதில், லபுசாக்னே 103, வோர்ணர் 95, ஸ்ரீவன் ஸ்மித் 93 ஓட்டங்களை எடுத்தார்கள்.

இங்கிலாந்தின் பந்துவீச்சில் ஸ்ரோக்ஸ் 3 விக்கெட்களை வீழ்த்தினார்.

இதன்பிறகு விளையாடிய இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸில் 84.1 ஓவர்களில் 236 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்களையும் இழந்தது. டேவிட் மலன் 80, அணித் தலைவர் ஜோ ரூட் 62 ஓட்டங்களை எடுத்தார்கள்.

ஸ்ரார்க் 4 விக்கெட்களையும் லயன் 3 விக்கெட்களையும் வீழ்த்தினார்கள்.

அதிக ஓட்ட இடைவெளி இருந்தபோதிலும், அவுஸ்திரேலிய அணி துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

ஆஸி. அணி 2ஆவது இனிங்ஸில் 61 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 230 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. லபுசாக்னே டிராவிஸ் ஹெட் தலா 51 ஓட்டங்கள் எடுத்தார்கள். இதனால் பகலிரவு டெஸ்டை வெற்றி பெற இங்கிலாந்து அணிக்கு 468 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இந்நிலையில் 5ஆம் நாளன்று தோல்வியைத் தவிர்க்கப் போராடிய இங்கிலாந்து அணி 113.1 ஓவர்களில் 192 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. கிறிஸ் வோக்ஸ் 44 ஓட்டங்கள் எடுத்தார். ஜோஸ் பட்லர், 207 பந்துகளை எதிர்கொண்டு 26 ஓட்டங்கள் எடுத்து கடைசியில் ஹிட் விக்கெட் முறையில் துரதிர்ஷ்டவசமாக ஆட்டமிழந்தார்.

ரிச்சர்ட்சன் 5 விக்கெட்களை வீழ்த்தினார்.

2ஆவது டெஸ்டை 275 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்ற அவுஸ்திரேலிய அணி, ஆஷஷ் தொடரில் 2-0 என முன்னிலை பெற்றுள்ளது. 3ஆவது டெஸ்ட், மெல்பர்னில் டிசெம்பர் 26 அன்று தொடங்குகிறது.



# ஆர்சனல் அபார வெற்றி

லீட்ஸ், டிசெ. 21

லீட்ஸ் யுனைட்டெற் 4 - 1 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் அணி வீழ்த்தியது.

ஐரோப்பிய கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் உதைபந்தாட்ட போட்டியில் கடந்த சனிக்கிழமை நடந்த போட்டியில் லீட்ஸ் அணி 9 வீரர்களுடன் விளையாடியது.

முழுப்பலத்துடன் களமிறங்கிய ஆர்சனல் அணிக்கு, மார்டிநெல்லி 16, 29ஆவது நிமிடங்களிலும் சகா 42ஆவது நிமிடத்திலும், ஸ்மித் 84ஆவது நிமிடத்திலும் கோல் அடித்தனர்.

லீட்ஸ் அணி சார்பில் ரபீன்ஹா 75ஆவது நிமிடத்தில் கோல் அடித்தார். (ஐ)

# மக்கள் பட்டினியால் வாட வேண்டிய பேரவலம் இம்முறை புத்தாண்டு வாழ்த்துக் கூறமுடியாது

## காவிந்த ஜெயவர்த்தன எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 21

“2022 ஆம் ஆண்டு மலரும் போது ‘இனிய புத்தாண்டாக அமையட்டும்’ என இம்முறை வாழ்த்துக் கூற முடியாத நிலைமை ஏற்படும்.”

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தன தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது: -

“2022 ஆம் ஆண்டு மலரும்போது, இனித புத்தாண்டாக அமையட்டும் என இம்முறை வாழ்த்துக்கூட கூற முடியாத நிலைமை ஏற்படும்.

ஏனெனில், பாரிய உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது. வறுமை நிலையும் உருவாகும். பட்டினியால் வாட வேண்டிய நிலை ஏற்படும்.



நாட்டு மக்களைப் பட்டினியில் வாடவைத்த அரசு என இந்த அரசு வரலாற்றில் இடம்பிடிக்கும்” - என்றார்.

# ஒமைக்ரோனை கட்டுப்படுத்த இங்கு நடவடிக்கை இல்லை!

## அரசு மீது ரத்னப்பிரிய குற்றச்சாட்டு

கொழும்பு,டிசெ. 21

**“ஒமிக்ரோன் வைரஸ் பிறழ்வு இலங்கையில் பரவுவதைத் தடுப்பதற்கு அரசு காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. தவறான அரசியல் தீர்மானத்தால்தான் பாரிய அச்சுறுத்தல் இதற்கு முன்னரும் ஏற்பட்டது. இனியும் அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட இடமளிக்க முடியாது.”**

- இவ்வாறு அகில இலங்கை தாதியர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: -

“ஒமைக்ரோன் வைரஸ் பிறழ்வே உலகுக்குத் தற்போது பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. இங்கிலாந்தில் நாளாந்தம் 70 பேர்வரை ஒமிக்ரோன் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். இலங்கைக்கும் அச்சுறுத்தல் உள்ளது. இதுவரை நால்வர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் இருந்து வந்த ஒருவருக்கும் ஒமைக்ரோன் உறுதியாகியுள்ளது. அவர் டிசெம்பர் 9ஆம் திகதி இலங்கை வந்துள் ளார். 11ஆம் திகதி வரை இருந் துள்ளார். டிசெம்பர் 9, 10 மற்றும் 11ஆம் திகதிகளில் கொழும்பில் கசினோ விளை யாடியுள்ளார்.

அந்தக் கசினோ நிலையத்துக்கு வந்தவர்கள் இன்னும் அடையாளம் காணப்படவில்லை. பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படவில்லை. இவ்வாறு செயற்பட்டால் எப்படி ஒமிக்ரோன் பிறழ்வு இலங்கையில் பரவுவதைத் தடுக்க முடியும்?

அவர் வந்த விமானத்தில் இருந்த விமான ஊழியர்கள் மற்றும் விமான நிலையத்துக்குள் தீர்வையற்றக் கடைகளில் இருந்தவர்கள் எனப் பலரும் அவரால் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளனர்.

இவை தொடர்பில் உரிய வகையில் தேடுதல் நடத்தாவிட்டால் எப்படி நிலைமையைக் கட்டுப்படுத்துவது? இது சுகாதார அமைச்சுக்கு விளங்காதது ஏன்?

இலங்கையில் விமான நிலையம் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. நைஜீரியாவுக்குச் சென்று வந்த நிலையில் ஒமிக்ரோன் தொற்றிய தனியார் பல்கலைக்கழக பேராசிரியர் ஒரு தடுப்பூசி கூட பெறவில்லை. அவ்வாறு பெறாதவர் எப்படி வெளிநாடு சென்றிருக்க முடியும்? சுகாதார வழிகாட்டல்கள் பின்பற்றப்படுவதில்ல.

வெளிநாட்டில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகள், அரசியல் பலம்மிக்க சுற்றுலா ஏஜன்களால், தமக்குத் தேவையான ஹோட்டல்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றது. இது தொடர்பில் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு அறிவிக்கப்படுவதில்லை.

எமது நாடு ஒரு தீவு. இங்கு



வைரஸ் பரவுவதைத் தடுக்கலாம். 2ஆவது அலையைக்கூட தவறான அரசியல் தீர்மானத்தால்தான் ஏற்பட்டது. இன்று பி.சி.ஆர். பரிசோதனை உரிய வகையில் மேற்கொள்ளப்படுவதில்லை. உண்மையான தரவுகளும் வெளிப்படுத்தப்படுவதில்லை. எவ்வித திட்டமிடல்களும் இன்றி, போலியான தகவல்களை மையப்படுத்தியே தற்போது நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன” - என்றார். (இ)

### மதில் சுவர் விழுந்து குடும்பஸ்தர் மரணம்

கொழும்பு, டிசெ. 21

கொழும்பு, ஹோமாகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டுவான வீதி, ஹோமாகம பிரதேசத்தில், வேலைத்தளமொன்றில் பணியாற்றிக்கொண்டிருந்த நபர் ஒருவர் மதில் சுவர் இடிந்து விழுந்ததில் பரிதாபகரமாக மரணமடைந்தார்.

மாதிவெல, கோட்டைப் பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

மதில் சுவருக்கு அருகில் மண் நிரப்பும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே மதில் சுவர் உடைந்து குறித்த நபர் மீது விழுந்துள்ளது. (இ)

### மேல் மாகாணத்தில் 7,810 பேர் சோதனை

மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறுவோரை கண்காணிக்கும் நடவடிக்கை கடுமையாக அமுல்படுத்தப்பட்டு வருகின்ற நிலையில், நேற்றுமுன்தினம் 7 ஆயிரத்து 810 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்களில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய 1,831 பேர் எச்சரிக்கப்பட்டுள்ளனர். 778 பொலிஸார் இணைந்து இந்த சோதனை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது 3 ஆயிரத்து 21 மோட்டார் சைக்கிள்களும், 2 ஆயிரத்து 645 ஓட்டோக்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. 7 ஆயிரத்து 810 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில் இவர்களில் 1,831 பேர் எச்சரிக்கப்பட்டுள்ளனர். (இ)

# உர இறக்குமதியை தனியாருக்கு வழங்கிவிட்டு பொறுப்பில் இருந்து அரசு விலகவே முடியாது!

## இராஜாங்க அமைச்சர் துமிந்த குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 21

இரசாயன உர இறக்குமதிக்கான அனுமதியை தனியார் நிறுவனத்துக்கு வழங்குவதன் மூலம் அரசு தமது பொறுப்பில் இருந்து விலகி விட முடியாது என இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சேதன பசளை அல்லது இரசாயன உரத்தை உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே தாம் உள்ளதாகவும் அவர்



குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

”அசௌகரியத்துக்கு முகங்கொடுத்துள்ள விவசாயிகளின் நன்மை கருதியே அரசு தமது கொள்கைகளில் மாற்றம் கொண்டு வந்தது.

டொலர் தட்டுப்பாடு காரணமாக தற்போது தனியார் நிறுவனத்துக்கும் இரசாயன உரத்தைக் கொள்வனவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, இந்த விடயத்தில் உரிய தீர்மானங்களை எடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளதுடன், அரசு என்ற வகையில் எமக்கும் அந்தப் பொறுப்பு உள்ளது” - என்றார். (இ)

# மகாவலி ஆற்றில் குதித்து மாயமான யுவதியின் சடலம் கரையொதுங்கியது!

பதுளை, டிசெ. 21

பதுளை, மஹியங்கனை பிரதேசத்தில், மகாவலி கங்கையில் குதித்துக் காணாமல்போன 19 வயது யுவதியின் சடலம் கரையொதுங்கியுள்ளது என மஹியங்கனைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கஸ்கொல்ல, ரிதிமாலியத்த பிரதேசத்தை சேர்ந்த யுவதியின் சடலமே இவ்வாறு கரையொதுங்கியுள்ளது.

சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக மஹியங்கனை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த யுவதி கடந்த 19 ஆம் திகதி, மஹியங்க னையிலுள்ள பாலத்திலிருந்து மகாவலி ஆற்றில் குதித்து காணாமல் போயிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)



## இன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தே இந்த தொழில் சங்க நடவடிக்கை முன்னெடுக் கப்படுகின்றது என்று அந்த சங்கத்தின் மத்திய குழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினர் மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் குறிப்பிட்டார். (ஐ)

## கிளிநொச்சியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் நேற்று முன்தினம் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்திய கிளிநொச்சி பொலிஸார் 15, 28 வயது நபர்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

## தனியான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் நேற்று கட்சியின் மூத்த தலைவரும், கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் இடம்பெற்றது. காலை 11 மணிக்கும் மாலை 6 மணிக்குமாக இரு அமர்வுகளாக இடம்பெற்ற இந்தக் கூட்டத்துக்கு தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா தலைமை தாங்கினார்.

ரெலோ கட்சியின் அழைப்பின் பேரில் இன்று செவ்வாய்க்கிழமை கொழும்பு - வெள்ளவத்தை - மரைன் டிரைவ் குளோபல் டவர்ஸ் ஹோட்டலில் தமிழ் பேசும் கட்சிகள் கூடிப் பேசுகின்றன. இதன்போது, 13ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்த கோரி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை வலியுறுத்தும் விதமான கடிதம் ஒன்றை கூட்டாக கைச்சாத்திட்டு அனுப்பவுள்ளன.

இந்தப் பொது உடன்பாட்டுக் கடிதத்தில் உள்ளடங்க வேண்டிய விடயங்கள் குறித்தே இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் செயல்குழு நேற்றுக் கூடிப் பேசியது.

இதன்போது, "13ஆவது திருத்தச் சட்டத்தை தாண்டி உச்சபட்ச அதிகாரப் பகிர்வு வலியுறுத்தப்பட வேண்டும். இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கடந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம்பெற்ற - மக்களின் ஆணை கிடைக்கப்பெற்ற விடயங்களை வலியுறுத்துவனவாக இருக்கும். அதேசமயம், இந்தியப் பிரதமர் மோடி இலங்கை வந்த போது வலியுறுத்திய கூட்டு உறவு சமஷ்டிக் கட்டமைப்பு (Cooperative federalism) விடயத்தை கோருவது என்றும், 13ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் அதேநேரம் 16ஆவது திருத்தச் சட்டத்தையும் முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் குறிப்பிடுவது என்றும் தமிழ் அரசு கட்சியின் வரைபில் விடயங்கள் உள்ளடங்குகின்றன.

மேலும், இன்றைய கூட்டத்தில் தமிழ் அரசுக் கட்சியின் பிரதிநிதிகளாக அந்தக் கட்சியின் மூத்த தலைவர் இரா. சம்பந்தன், கட்சித் தலைவர் மாவை சோ. சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் ஆகியோர் பங்கேற்பார்கள். தமிழ் அரசுக் கட்சி வலியுறுத்தும் விடயங்களும் பொது உடன்பாடு எட்டப்படும் கடிதத்தில் உள்ளடக்கப்பட்டால் இரா. சம்பந்தன், மாவை சேனாதிராசாவும் கையொப்பமிடுவர் என்றும் முடிவு எட்டப்பட்டது.

தமிழ் அரசுக் கட்சியின் நேற்றைய அரசியல் செயல்குழு கூட்டத்தில் இரா. சம்பந்தன், மாவை சோ. சேனாதிராசா, எம். ஏ. சுமந்திரன், சி.சிறிதரன், ப.சத்தியலிங்கம், சீ. வீ. கே.சிவஞானம், கே. வி. தவராசா, கி. துரைராஜசிங்கம், த.கலையரசன், சே. குலநாயகம் ஆகியோர் பங்கேற்றனர். (ஐ-இ)

## பட்டத்துடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவம் பலரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

நேற்று இளைஞர்கள் பலர் கூடி அந்தப் பகுதியில் பெரிய பட்டம் ஒன்றை பறக்க விட்டனர். பின்னர் அந்தப் படத்துடன் இன்னொரு பட்டத்தை இணைத்து விடுவதற்கு முனைந்தனர். அப்போது, இரண்டாவது பட்டத்தின் 'முச்சை' கயிற்றை பிடித்திருந்த வரும், முதல் பட்டத்தின் பறப்பு வேகத்தில் பறக்க ஆரம்பித்தார்.

சுமார் 40 அடி உயரம் வரை பறந்த வரை கீழிறக்க முடியாமல் இளைஞர்கள் திணறினர். சுமார், 5 நிமிடங்கள் பறந்த நபர் கயிற்றுடன் வழுக்கி வந்து சுமார் 20 அடிவரை கீழிறங்கிய பின்னர் கையை விடவே அவர் கீழே விழுந்தார்.

இதைத் தொடர்ந்து அவர் உடனடியாக பருத்தித்துறை ஆதார மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார். எனினும், அவருக்கு பாரதூரமான காயங்கள் எவையும் தெய்வாதீனமாக ஏற்படவில்லை என்று தெரிய வருகின்றது. (ஐ-2)

## திடீர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டது. எனினும் சிகிச்சை பயனின்றி இரவு 9 மணிக்கு குழந்தை உயிரிழந்துவிட்டதாக மருத்துவ அறிக்கையிடப்பட்டது.

குழந்தையின் மாதிரிகள் பெறப்பட்டு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் கோவிட்-19 தொற்று இல்லை என அறிக்கையிடப்பட்டது.

இறப்பு விசாரணையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ)

## பெண்ணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நகர பார் வீதியில் நேற்று திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் செல்வராஜா தயாவதி (வயது - 47) என்பவரே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

அந்த வீட்டில் உயிரிழந்த பெண்ணுடன் கணவரும் மகளும் வாழ்ந்துள்ளனர். அந்த வீட்டில் பணியாற்றிய பெண் தனது கஷ்டம் குறித்து உயிரிழந்த பெண்ணுக்கு தனது தந்தையுடன் சென்று கூறியிருந்தார். இதைத் தொடர்ந்து மதிய உணவை உண்டு வீட்டு உரிமையாளரான பெண்ணும் மகளும் உணவருந்தி விட்டு தங்களின் அறைகளுக்கு நித்திரை கொள்வதற்காக சென்றுள்ளனர்.

இதன்போது, பணிப் பெண்ணையும் அவரின் தந்தையையும் உணவருந்தி விட்டு செல்லுமாறு வீட்டு உரிமையாளர் கூறியுள்ளார். அந்தச் சமயத்தில் பெண்ணின் கழுத்தை வெட்டியவர்கள் கைகளையும் துண்டுகளாக்கினர். அத்துடன், அவரின் கழுத்தில் இருந்த தங்க நகைகளை எடுத்தவர்கள், தோட்டை அபகரிப்பதற்காக காதுடன் அறுத்து தமது பையில் போட்டுக் கொண்டு முச்சக்கர வண்டியில் தப்பியோட முனைந்தனர்.

இவர்களின் நடவடிக்கையில் சந்தேகமடைந்த அப்பகுதி மக்கள் அவர்களை மடக்கிப் பிடித்தனர். இதன்போது, பெண் கொல்லப்பட்ட விடயமும் வெளித்தெரிந்தது. இதைத் தொடர்ந்து அவர்கள் இருவரையும் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

கைதான பெண் திருமணமானவர் என்றும், இருவரும் வாழைச்சேனைப் பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (ஐ)

# காங்கேசன்துறை கோவிலின் பிள்ளையார் சிலை மாயம்!

யாழ்ப்பாணம், டிசெ. 21

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை குமார கோவிலில் இருந்த பிள்ளையார் சிலையை காணவில்லை என காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆலய வளாகத்தினுள் விகாரை ஒன்று அமைக்கப்பட்டு உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

காங்கேசன்துறை குமார கோவில் பகுதி உயர்பாதுகாப்பு வலயமாக இருந்த காலப்பகுதியில் கோயில் வளாகத்தினுள் விகாரை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பின்னர் அப்பகுதி மக்களிடம் கையளிக்கப்பட்டதை அடுத்து , குமார கோவில் புனரமைக்கப்பட்டு, ஆலயத்தில் பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வந்தன.

இந்நிலையில் கடந்த 09ஆம் திகதி இரவு ஆலயத்தில் இருந்த விநாயகர் சிலை இருப்பிடத்தில் இருந்து பெயர்த்து எடுக்கப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பில் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

# இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்கிறது!

வடமராட்சி, டிசெ. 21

வடமராட்சி பருத்தித்துறை கடற்பரப்பில் நேற்று முன்தினமும் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

முனைப்பகுதி மீனவர்களின் 4 வலைகள் அறுத்து சேதமாக்கப்பட்டன. அத்துடன், ஒரு மீனவரின் படகு உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்களின் இழுவை படகிலிருந்து கற்கள், பொல்லுகள் ஈயக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தினர் என்று மீனவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

நேற்று முன்தினம் இலங்கை கடற்படையினரால் 6 படகுகளும் 43 இந்திய மீனவர்களும் கைது செய்யப்பட்ட நிலையிலும்கூட பருத்தித்துறை பகுதியில் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடித்து சேதங்களை ஏற்படுத்தியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-2)

## ரூ.20ஆல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி, ஒக்ரேன் 92 ரக பெற்றோலின் விலை 20ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் புதிய விலை 177 ரூபாயாக விற்பனை செய்யப்படவுள்ளது.

184 ரூபாயாக விற்கப்பட்ட ஒக்ரேன் 95 பெற்றோலின் விலை 23 ரூபாயால் உயர்ந்து 207 ரூபாயாக உயர்ந்துள்ளது.

ஒட்டோ டீசலின் விலை 111 ரூபாயிலிருந்து 10 ரூபாயால் உயர்ந்து 121 ரூபாயாகவும், 144 ரூபாய் விற்கப்பட்ட சுப்பர் டீசலின் விலை15 ரூபாயால் உயர்ந்து 159 ரூபாயாக விற்கப்படவுள்ளது.

மண்ணெண்ணெயின் விலை 77 ரூபாயிலிருந்து 10 ரூபாயால் அதிகரித்து 88 ரூபாயாக விற்பனை செய்யப்படவுள்ளன

# தொற்றால் 19 பேர் மரணம்!



கொழும்பு, டிசெ. 21

கொரோனா தொற்று காரணமாக நேற்று முன்தினம் மட்டும் நாடு முழுவதும் 19 பேர் உயிரிழந்தனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நேற்று தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்த அறிக்கை யில் 6 ஆண்களும், 13 பெண்களுமாக 19 உயிரி ழந்தனர். இதனால், நாட்டில் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 14 ஆயி ரத்து 771 பேர் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## 11கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைப்பின்பேரில் 13ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கை அரசாங்கம் முழுமையாக நடைமுறைப்படுத்துவதை இந்தியாவை உறுதி செய்யுமாறு கோரி பொதுஉடன்பாடு ஒன்றை ஒட்டி கடிதம் ஒன்றை அனுப்புவதற்காக கூடி பேசுவதுடன், அதில் கையொப்பமிடவும் உள்ளன.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மூத்த தலைவருமான இரா. சம்பந்தன், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன், ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் கட்சியின் தலைவர் த. சித்தார்த்தன், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பங்காளிக் கட்சிகளான மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வே. இராதகிருஷ்ணன் மற்றும் தேசிய தொழிலாளர் சங்கத்தின் தலைவர் பழினி திகாம்பரம், ஈ. பி. ஆர். எல். எவ்வின் தலைவர் சுரேஷ் பிறேமசந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என். ஸ்ரீகாந்தா ஆகியோருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம். ஏ. சுமந்திரனும் பங்கேற்பார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தாய்வீடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அசாத் சாலி, முன்னாள் ஆளுநர் கீர்த்தி தென் னக்கோன் ஆகியோரே இவ்வாறான நகர்வில் ஈடுபட்டுள்ளனர் என தெரிய வருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி பலமாக இருந்தபோது இவர்கள் முன்னணி செயற்பாட்டாளர்களாக இருந்தனர்.

தேசிய அரசொன்றை அமைக்க முன்வருமாறு ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு வந்துள்ள நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியினருடன் பலர் பேச ஆரம்பித்துள்ளனர் என அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# இலங்கைக்கு கைகொடுக்கும் சீன அரசு!

கொழும்பு, டிசெ. 21

எதிர்வரும் சில தினங்களில் சீன அரசிடமிருந்து 1.6 பில்லியன் டொலர் கடன் தொனை இலங்கைக்கு கிடைக்கவுள்ளதாக அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

அதற்கமைய, இந்த தொகையினூடாக இலங்கை ஜனவரி மாதம் செலுத்தவேண்டிய கடன் தவணையை செலுத்தக் கூடியதாக இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நிகழ்வொன்றில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் கூறினார்.

# வவுனியாவில் நால்வர் கைது

வவுனியா, டிச. 21

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் கஞ்சா மற்றும் ஹெரோயின் பொதிகளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர்கள் நான்கு பேரை வவுனியாப் பொலிஸார் நேற்றுக் கைதுசெய்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் சந்தேகத்துக்கிடமான இளைஞர்களின் நடமாட்டம் இருக்கின்றது எனப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் அப்பகுதியில் திடீர் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்த வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பீ.ஆர்.மானவடு தலைமையிலான குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய இளைஞர்களைச் சோதனை செய்தபோது ஹெரோயின் மற்றும் கஞ்சா என்பவற்றை சிறு சிறு பொதிகளாக வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நான்கு இளைஞர்களைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து 800 மில்லிகிராம் கேரளா கஞ்சாவும் ஹெரோயினும் மீட்கப்பட்டுள்ளன என்று வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் தாண்டிக்குளம், புதுக்குளம், மரக்காரம்பளை மற்றும் கிளிநொச்சி பகுதிகளைச் சேர்ந்த 24, 25, 22, 29 வயதுடையவர்கள் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனவும், விசாரணைகளின் பின்னர் குறித்த நபர்களை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (இ)




# 24 மணித்தியாலமும் விவசாயிகளை ஏமாற்றி வருகின்றது ராஜபக்ஷ அரசு

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 21

**"24 மணித்தியாலமும் விவசாயிகளை அரசு ஏமாற்றி வருகின்றது. விவசாயிகளுக்கு வெடிக்கும் திரவ உர கொள்கலன்கள் வழங்கப்பட்டுள்ளன. விவசாயத்துக்கும் விவசாயிகளுக்கும் ஏன் இவ்வாறான அழிவை ஏற்படுத்துகின்றார்கள் என்று அரசிடம் கேள்வி எழுப்புகின்றோம்."**

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

விவசாயிகளின் பிரச்னைகள் தொடர்பில் ஆராயும் கூட்டம், அம்பாந்தோட்டை திஸ்ஸமஹாராம, காசிங்கம் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததா வது:-

"இரசாயன உரங்களை வழங்க முடியாது என விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் தற்போது தெரிவித்துள்ளார். எனினும், இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதாக சுற்றறிக் கையை வெளியிட்டது ஏன் என அரசு பதிலளிக்க வேண்டும்.

இவ்வாறான சுற்றறிக்கைகளை வெளியிட்டு விவசாயிகளை அரசு மீண்டும் ஏமாற்றியுள்ளது.

தரமற்ற உரத்தைக் கொண்டு வந்ததற்காக சீனக் கப்பலுக்கு நட்டஈடு வழங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஆனால், அப்பாவி விவசாயிகளுக்கு நட்டஈட்டை வழங்குவதற்கு இந்த அரசு முயற்சிப்பதில்லை.

பண்டிகைக் காலம் அண்மித்திருக்கின்ற நிலையில் மக்கள் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அரசின் அனைத்துச் சலுகைகளும் அமைச்சர்களுக்கும் நண்பர்களுக்கும் மாத்திரமே கிடைக்கின்றது" - என்றார். (இ)

# குடும்பச் சண்டையில் இளைஞர் கொடூரமாக வெட்டிப் படுகொலை

## சந்தேகநபரிடமிருந்து வாள், துப்பாக்கி மீட்பு

கொழும்பு, டிசெ. 21

இருவருக்கிடையில் ஏற்பட்ட முறுகலில் ஒருவர் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மாத்தளை, மஹவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொல்வத்த, செலகம பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சாந்தபுரம், பொல்வத்த பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயது இளைஞரே இவ்வாறு கொலைசெய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் உடனடியாக மாத்தளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய 34 வயது நபரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இதன்போது கொலைக்குப் பயன்படுத்திய வாள் மற்றும் உள்நாட்டுத் துப்பாக்கி என்பவற்றை சந்தேகநபரிடமிருந்து பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

குடும்பச் சண்டையே இந்தப் படுகொலைக்குக் காரணம் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தாக்குதலின்போது சந்தேகநபரும் காயமடைந்துள்ள நிலையில், பொலிஸ் பாதுகாப்பில் மாத்தளை வைத்தியசாலையில் அவர் சிகிச்சை பெற்று வருகின்றார். இந்தச் சம்பவம் தொடர்பில், மஹவெல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# கணவர்மார்களின் கடும் துன்புறுத்தலால் கொழும்பில் 20 பெண்கள் தீ மூட்டி மரணம்

## மாநகர மேலதிக மரண விசாரணை அதிகாரி தகவல்

கொழும்பு, டிசெ. 21

"கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் இவ்வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் 20 குடும்பப் பெண்கள் உடலுக்குத் தீ மூட்டி உயிரிழந்தனர்."

- இவ்வாறு கொழும்பு மாநகர மேலதிக மரண விசாரணை அதிகாரி இரேஷா சமரவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பெண்களே இவ்வாறு மரணமடைந்துள்ளனர். இவர்களில் 20 - 30 வயதுக்குட்பட்ட 19 பெண்கள் உள்ளடங்குகின்றனர். உயிரிழந்த 20 பெண்களும் திருமணமானவர்கள்.

கணவர்மார்களின் கடுமையான துன்புறுத்தல்கள், அச்சுறுத்தல்கள் தாங்க முடியாத காரணத்தினாலேயே உடலுக்குத் தீ மூட்டி தற்கொலைக்குத் துணிந்துள்ளனர்.

இதற்கு முன்பு தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் இருக்கவில்லை என்றும் 99 சதவீதமான பெண்கள் வாக்குமூலமளித்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் உடலுக்குத் தீ மூட்டிக்கொண்டதன் பின்னர், தங்களைக் காப்பாற்றிக்கொள்வதற்காக இறுதி வரை அயலவர்களின் உதவியை நாடியுள்ளனர்.

50 சதவீதமான எரிகாயங்களை உடையவர்களின் உயிரைக் காப்பாற்ற முடியும். இவ்வாறு உயிரிழந்த பெண்கள் அனைவரும் இறுதி வரை நிதானத்துடனேயே இருந்தார்கள்.

தோலுக்கு அடியில் உள்ள எண்ணெய் படலம், தீக்கு நல்ல ஊக்கியாக இருப்பதால், உடல் தீப்பிடிக்கும்போது, தீயை அணைப்பது பொதுவாக கடினமாக இருக்கும். அதனால்தான் ஓர் உடல் மரத்தை விட வேகமாகத் தீயில் எரியும் என்று கூறப்படுகின்றது.

எனவே, ஒருவரைத் தற்கொலைக்குத் தூண்டுமளவுக்கு அச்சுறுத்துவது அல்லது கொடுமைப்படுத்துவது மனித பண்பு அல்ல. அது பாரிய மனித உரிமை மீறலாகும்" - என்றார். (இ)






இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.12.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து - உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர் - மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க - நேரலை




**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - கண்டேன் காதலை, ஜக்போட் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி




5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ்-வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**
7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை-இலக்கிய நிகழ்ச்சி
10.00 மணி : BLACK AND WHITE

---

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

---

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

---

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

---

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

---

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு ஞாயிறு)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : மறைக்கல்வி (மட்டக்களப்பு) ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம் மறு ஒலிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
06.00 மணி : இயேசுவின் போதனைகள்
07.30 மணி : அன்பியம்( சனி மறுஒளிபரப்பு)

---

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு